


# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மாசி - பங்குனி
மார்ச் - 2020

மலர் 9 இதழ் 3


## பொருளடக்கம்


ஆசிரியர் பக்கம் 3

வண்டு ஸ்தோத்ரம் 5
பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

நீதிக் கதைகள் 7
பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

அனுக்கிரஹ பாஷணம் 10
பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

தமிழ் பாகவதம் 13

ஸ்ரீ தேவி பாகவதம் 15

பங்குனி மாத விசேஷ தினங்கள் 17

மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ - 22 18

காளிதாஸரின் விஷ்ணு துதி 20

வாழ்வின் நான்கு நிலைகள் 22

புராணக்கதை 24

மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்ரம் 26

ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி 27

ஸ்ரீ மடம் நிகழ்ச்சிகள் 29

வேதாந்த ஸாரம் 33

மகாபாரத சுருக்கம் 34

ஜயத தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் 37

அத்வைத வினா - விடை 39

பகவத் பாதாளின் மகிமை 42

மனதுக்கு மருந்து 44

மனசாந்தி 47


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்





ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி



ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

ஜகதீஷ் லால் அஹுஜா, யோகி ஏரோன், குசால் கொன்வர் சர்மா, அப்டுல் ஜப்பார், துளசி கௌடா, ராமக்ருஷ்ணன். இவர்கள் யார் ? இவர்களுக்கும் ப்ரதீபத்துக்கும் என்ன தொடர்பு? என்று வாசகர்கள் கேட்கலாம். மேலே படிக்கவும். தொடர்பு விளங்கும்.

மேலே சொல்லப்பட்ட நபர்கள் அண்மையில் பத்மஸ்ரீ விருது பெற்றவர்கள். தன்னலமற்ற சேவைக்காக விருது பெற்றவர்கள். மத்ய அரசு இவர்களை கௌரவித்துள்ளது. அப்படி என்ன செய்தார்கள்? பார்ப்போம்.

ஜகதீஷ் லால் அஹுஜா இவர் சண்டிகரில் சுமார் 2500 ஏழை நோயாளிகளுக்கு தினமும் உணவு வழங்குகிறார். யோகி ஆரோன் ப்ளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூலம் பல்லாயிரக்கணக்கான நோயாளிகளுக்கு சிகிச்சை செய்கிறார். அருனோடய் மோண்டல் எந்தவிதமான ப்ரதிபலனையும் எதிர்பார்க்காமல் பல கஷ்டத்துடன் வங்காளத்தில் யாரும் போகாத இடங்களில் வசிக்கும் மக்களுக்கு இலவச மருத்துவம் செய்கிறார். துளசி கௌடா சுமார் 60 வருடங்களாக 1லக்ஷத்துக்குமேல் பலவிதமான மரக்கன்றுகளை நட்டு இயற்கையை பாதுகாக்கிறார். ராமக்ருஷ்ணன் தன்னுடைய நோயையும் பாராட்டாமல் மிகச்சிறந்த சமூகசேவையை செய்து வருகிறார். (அமர் ஸேவா சங்கம்)

இவர்களுடைய விஷிஷ்ட சேவைக்காக கௌரவிக்கப்பட்டவர்கள். இவர்களைப்பற்றி எந்த சேனலாவது ஒளிபரப்பினவா? கண்டுகொள்ளவேயில்லை. தினமும் தங்கள் டிஆர்பி ரேட்டுக்காக புரட்டுச் செய்திகள் வெளியிடும் சேனல்கள் மௌனம் காத்தன. பத்ரிகைகள் பரவாயில்லை. விருது வழங்கப்பட்டபின் அவர்களைப்பற்றி தகவல்களை வெளியிட்டன. இவர்களுக்கும் ப்ரதீபத்துக்கும் என்ன தொடர்பு? இவர்கள் நமது ஸனாதன தர்மம் காட்டும் 'பூர்த'' தர்மத்தை செய்திருக்கிறார்கள் யாகம் செய். ஹோமம் செய் என்று சொல்லும் நமது தர்மம் பூர்தம் எனும் social service யும் வலியுறுத்திச் சொல்லும். காமாக்ஷி அம்மன் 32 அறங்களைச் செய்ததாக புராணங்கள் கூறும். ஆதுரர்களுக்கு மருந்து தருதல், தண்ணீர் பந்தல் அமைத்தல், மாடுகள் சொரிந்து கொள்ள கல் அமைத்தல், அனாதைகளுக்கு அன்னம் அளித்தல், நடக்கும் வழி சீரமைத்தல் இப்படி பல அறங்களை நூல்கள்பேசும். இவர்கள் செயல் பலருக்கு முன்னுதாரணமாய் விளங்குகிறது என்றால் மிகையில்லை. Corporate social responsibility என்று அரசாங்கம் ஓர் உத்தரவு செய்து அதன் மூலம் நல்ல பரோபகார கார்யங்கள் நடக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அவை கட்டாயத்தின் மீது நடக்கும்.

இவர்களுடையதா உண்மையான தொண்டுள்ளத்தினால் நடக்கின்றன. பெரிய தனவந்தர்களை தொண்டில் ஈடுபடுத்தியது மகாத்மா காந்திதான். தங்களது கஷ்டத்தையும் பாராமல் இவர்கள் செய்யும் தொண்டு பெரியது. ஞாலத்தின் மாணப்பெரிது என்பார் திருவள்ளுவர். இது பற்று ஸ்ரீசரணர்கள் கூறுகிறார்கள்.

‘‘சேவை என்று தெரியாமலே அவரவரும் தமது குடும்பத்துக்காக சேவை செய்கிறோம். அதோடு நமக்குச் சம்பந்தமில்லாத குடும்பத்துக்கு, ஊருக்கு, நாட்டுக்கு, சர்வ தேசத்துக்கும் நம்மால் முடிந்த சேவையை செய்ய வேண்டும். நமக்கு எத்தனையோ கஷ்டங்கள், வீட்டுகவலை சாப்பாட்டுக்கு அவஸ்தை இத்யாதி இருக்கின்றன. நம் சொந்த கஷ்டத்துக்கு நடுவில் சமூகசேவையா என்று நினைக்கக்கூடாது. உலகத்துக்குச் சேவை செய்வதாலேயே சொந்த கஷ்டத்தை மறக்க வழி உண்டாகும். அதன் பலனாக பகவான் சொந்த கஷ்டத்திலிருந்து கைதூக்கி விடுவான். நமக்கே ஆத்மத்ருப்தி உண்டாகும். அவ்வழியில் மேலும் செல்வோம்.

நம்மைப் போல் சேவை செய்ய விருப்பம் உள்ளவர்களை சேர்த்துக் கொண்டு எல்லாரும் சங்கமாக சேவை செய்வது ஸ்லாக்யம். கூடி செய்யும் போது நிறையபணி செய்ய முடியும். சேவை செய்பவர்களுக்கு ஊக்கம். தைர்யம் அவஸ்யம். மானம் அவமானத்தை பொருட்படுத்தாத குணம் வேண்டும் . ’’ (தெய்வத்தின் குரல் 1ஆம்பாகம் )

மேலே குறிப்பிட்ட நபர்கள் மகாஸ்வாமிகள் கூற்றுப்படி நடக்கின்றனர் அல்லவா. அதுதான் ப்ரதீபத்துக்கும் சம்பந்தம். நாமும் பெரிய அளவில் இல்லாமல் போனாலும் நம்மால் முடிந்த உபகாரத்தை செய்ய வேண்டும். இப்படி செய்பவர்கள் இன்னும் நிறைய செய்யலாம். இதுவரை செய்யாதவர்கள் இப்போதே ஆரம்பிக்கலாம். பத்மஸ்ரீ எல்லாருக்கும் வராது. ஆனால் நாம் பரோபகார ஸ்ரீகளாகுவோம். இந்த பரோபகார ஸ்ரீமந்தர்களை நினைப்போம், அவர்கள் செயல் போல் செய்ய முயலுவோம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீசரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

வாசகர்கள் மறக்காமல் சந்தா தொகையை செலுத்துமாறு வேண்டுகிறோம். உங்கள் நண்பர்களை ப்ரதீபத்தின் சந்தாதாரராக சேர ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

# வண்டு ஸ்தோத்ரம்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

### அத்வைத தத்வமும் நடப்பு நிலையும்



ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர்கள் உலகத்திலுள்ள மேதைகள் எல்லோரும் ஆச்சர்யப்படும்படியாக அத்வைத பாஷ்யங்கள் செய்திருக்கிறார். ஏற்கெனவேயிருந்த ப்ரஹ்ம ஸூத்ரம், உபநிஷத்துக்கள், பகவத் கீதை முதலியவற்றை விளக்கி அவர் எழுதியதற்கு "பாஷ்யம்" என்று பெயர். இது தவிர தாமே (ஒரிஜினலாக) "விவேக சூடாமணி", "உபதேச ஸாஹஸ்ரீ" முதலான பல அத்வைத க்ரந்தங்களைச் செய்திருக்கிறார். பாஷ்யத்திலிருந்து வித்யாஸம் தெரிவதற்காக, அவர் சொந்தமாகச் செய்த இது போன்ற நூல்களை "ப்ரகரண க்ரந்தங்கள்" என்பார்கள்.

இவற்றிலெல்லாம் சொல்லப்பட்ட அத்வைத தத்வம் என்பது ரொம்பவும் பெரிய விஷயம். நாம் ஸத்யமானது என்று நினைத்துக் கொண்டிருக்கிற இந்த ஜகத்குரு மாயை; பரமாத்மா ஒன்றுதான் ஸத்ய வஸ்து; அதற்கு வேறாக இருக்கிற ஜீவாத்மா என்று தன்னை நினைத்துக் கொண்டிருக்கிற நாமும் வாஸ்தவத்தில் அந்த பரமாத்மா தவிர வேறே இல்லை; ஜீவனே தான் ப்ரஹ்மம் – என்பதுதான் அத்வைதம். ச்ருதி (வேத) ப்ரமாணத்தாலும், அறிவாலும், அனுபவத்தாலும் ஆசார்யாள் இந்த ஸித்தாந்தத்தை அலசி அலசி நிச்சயப்படுத்தி, பாறாங்கல் மாதிரி நிலைப்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

ஆனாலும், இந்தப் பரம ஸத்யமான தத்வம் நம்மிலே பெரும்பாலாருக்கு எட்டவே மாட்டேன் என்கிறது. அறிவு மூலம் இதுதான் உண்மை என்ற ஆசார்யாளின் வாதங்களைப் படித்து உறுதி ஏற்பட்டாலும் கூட, அநுபவம் என்று வருகிறபோது அத்வைதம் எங்கேயோ, நாம் எங்கேயோ என்றுதான் அதற்கு ரொம்ப தூரத்தில் நிற்கிறோம். ஜீவனும், ப்ரஹ்மமும் என்று ஒன்று வேறு புத்தியால் தெரிந்து கொண்டு

என்ன ப்ரயோஜனம்? ஒரு ஆட்டமும் இல்லாமல் அப்படியே பரம சாந்தமாக இருந்து கொண்டிருக்கிற ப்ரஹ்மமாக நம்மை நாம் எங்கே தெரிந்து கொள்ள முடிகிறது? நமக்கு ஓயாத ஓட்டம்; ஓயாத அமைதியின்மை தான். மனஸின் ஓட்டமும், ஓடிக் கொண்டே இருக்கிற இந்த ப்ரபஞ்சமும்தான் நமக்கு தெரிந்த உண்மை. மனஸ் நின்றுவிட்டால் இந்த ஓட்டம் இல்லை. அப்போது ஜகத் மாயையாக மறைந்து போய்விடும். நாம் ப்ரஹ்மமாக இருந்து கொண்டிருப்போம். ஆனால் மனஸ் நிற்கவே மாட்டேன் என்கிறதே! அதனால் அத்வைதம் என்பது நமக்குக் கொஞ்சம்கூட அநுபவத்தில் தெரிவதில்லை.

ஆனாலும் அந்த அநுபவத்துக்குப் போவதற்கு நாம் இங்கிருந்தே ஆரம்பித்துத்தான் ஆகவேண்டும். நாம் இருக்கிற நிலையில் நமக்கு ஸத்யமாகத் தெரிகிறவைகளை வைத்துக் கொண்டே அநுஷ்டானங்களை ஆரம்பித்துப் படிப்படியாக, மேலே மேலே போய், இதெல்லாம் ஸத்யமில்லை என்று தெரிந்து கொண்டு (தெரிந்து கொண்டு என்றால் சும்மா புத்தியால் தெரிந்து கொள்வதில்லை; அநுபவத்தில் தெரிந்து கொள்ள வேண்டும்). ஒரே ஸத்யமான அத்வைத ஸித்தியை அடைய வேண்டும்.

(தொடரும்)

## ஏக தின கோடி காயத்ரி ஜபம்



ஸ்ரீ ஆசார்யார்களின் ஆசிகளுடன் உலக மக்களின் நலன் வேண்டி நடைபெற விருக்கும் ஒருநாள் கோடி காயத்ரி ஜபத்தில் கலந்து கொள்ள, **ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் பஞ்சமி சேவா ட்ரஸ்ட் மற்றும் ஸ்ரீ சங்கரா டி.வி** அனைத்து அந்தணர் பெருமக்களையும் அன்புடன் அழைக்கிறார்கள்.

**நாள் : 1 - மே 2020**

**இடம் :** வள்ளுவர் குருகுலம் உயர்நிலைப்பள்ளி

மேற்கு தாம்பரம், சென்னை - 600 045 (தாம்பரம் பஸ் நிலையம் அருகில்)

தொடங்கும் நேரம் : **காலை 5.30 மணிக்கு மேல் 8.30 மணிக்குள்**

**சந்தர்ப்பணை : 12.30 மணி முதல்**

ஜபத்தில் பங்கேற்க தயவு செய்து உங்கள் பெயர், வயது, கோத்திரம், தொலைபேசி எண் ஆகிய விவரங்களை

6382308117 / 6382152792 / 7358210965 எண்களுக்கு by SMS / Whatsapp

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஏற்பது இகழ்ச்சி



***பிறர் விரும்பித் தானமாக வழங்குவதைக் கூட ஏற்பது இகழ்ச்சியைத் தரும். தேவையைக் கூட, யாசித்துப் பெறாமல் உழைத்துப் பெறுவதே தன்னைத்தான் மதிப்பாகும்f***

ஸோமதத்தனும், விசித்ர சித்தனும் பக்கத்துப் பக்கத்து நாட்டரசர்கள். இருவரும் தானம் தருவதிலும் ஆர்வமுள்ளவர்கள். நேர்மையும், வீரமும், தன்மானமும் மிக்கவர்கள். இருவரும் நண்பர்களே. ஆனால் விசித்திர சித்தனிடம் ஒரு தனிப்பண்பு உண்டு. தான் தானம் கொடுப்பதால், மக்கள் தன்மானமின்றி யாசித்தும் பெறுவதையும் உழைப்பின்றி வாழ்வதையும் நடைமுறையாக கொண்டுவிடுவர் என்று எண்ணித் தன்னிடம் தானம் பெற வருபவனைப் பெறுகின்ற பொருளுக்கு மாற்றாக எதையேனும் தரச் செய்து பின்னரே கோரியதைத் தருவான் அல்லது ஏற்பது இகழ்ச்சி தரும் என்ற கருத்தை அவர்களை ஏற்கும்படி செய்வான். அதனால் அவனிடம் தானம் பெற செல்பவர் பின் நல்லுழைப்பால் தன் வாழ்வைத் தானே சீரமைத்துக் கொள்வர். மக்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பை உணர்ந்தவன் அவன்.

ஒரு குரு தனது சீடன், கல்விகற்று முடிந்ததும் அவனிடம் குருதட்சிணையாக நூறு குதிரைகளைத் தரும்படி பணித்தார். பொதுவாகத் தன்னிடம் கல்வி கற்க வந்தவனிடம் அவர் தட்சிணை பெறுவதில்லை. கற்றபடி வாழ்க்கையில் அவன் நல்லவனாக நடந்து கொள்வதையே அவர் தட்சிணையாகக் கருதுவார். ஆனால் இந்த சீடனோ, சிறிது அகந்தை உள்ளவன். கல்வியால் ஏற்படக்கூடிய பணிவோ, அடக்கமோ, பிறரை மதிப்பதோ அவனிடம் இல்லை. அதனால் இவன் கல்விகற்றதன் பயனைப் பெற இயலாது. உலகம் இதனை அவனுக்குப் போதிக்கட்டும் என்றெண்ணி

அவனால் இந்த தட்சிணை கொடுக்க இயலாதென்று உணர்ந்தே நூறு குதிரைகள் கொணரும்படி பணித்தார். சீடனும் குருதட்சிணை தருவதால் மற்ற சீடர்களிடையே மதிப்பைப் பெற முடியும் எண்றெண்ணினான். அரசர்களிடம் சென்று எளிதில் யாசித்து இதனை நிறைவேற்றி விடலாம் என்ற தைரியத்தில் ஸோமதத்தனிடம் சென்றான்.

ஸோமதத்தன் தன்னிடம் குதிரைகள் இல்லை என்ற உண்மையைக் கூறி, விசித்திர சித்தனிடம் செல்லும்படி கூறினான். விசித்திர சித்தன் தன்னிடம் யாசிக்க வந்தவனை உற்று நோக்கினான். அவனது மனநிலை அறிந்தான். எதற்காக வந்தீர் எனக் கேட்டான். "நூறு குதிரைகள் தருவீர். நான் குரு தட்சிணை தர வேண்டும்" என்று சீடன் கேட்டான். அரசன் மௌனமாக இருந்தான். மறுபடி சீடன் வற்புறுத்தத் தொடங்கினான்.

அரசன் அருகிலிருந்த சவுக்கை எடுத்து சீடனை அடிக்கத் தொடங்கினான். "என்னைக் காரணமின்றி அடிக்கிற உம்மை நான் சபித்து அழித்து விடுவேன்" எனச் சீடன் உரக்கக் கத்தினான். அடிப்பதை நிறுத்தாமலேயே அரசன் சொன்னான் - மாணவரே! நீர் தரவேண்டிய குரு தட்சிணையை என்னைத் தரச் சொல்கிறீர். இதற்கு உமக்கு ஏது தகுதி? உமது பொருளாக இல்லாததை, எனக்கே உரித்தானதை, எப்படிக் கேட்கலாம்? அப்படி நான் கொடுக்காவிடில் சபிப்பீரோ? இது என்ன நியாயம்? நல்லோர்களுக்குத் தருவதற்கென்றே பொருள் வைத்துள்ளேன். அதை உம்மிடம் தருவதற்கு உமக்கு ஏது தகுதி? என்றான்.

சீடனுக்கு உண்மை புரிந்தது. பிறர் பொருளை எளிதில் யாசித்துப் பெறலாம் என்ற எண்ணம் தவறானது. தனது தகுதியை உணர்ந்து அவரே விரும்பித் தந்த பொருளை ஏற்கலாம். பிறரிடம் உரிமை கொண்டாடிப் பிறர் பொருளைப் பெறத் தகுதி எவருக்கும் இல்லை என உணர்ந்தான். அரசனிடம் மன்னிப்புக் கோரிப் பணிவுடன் நின்றான். அரசன் அடிப்பதை நிறுத்தினான். பணிவும், பரிவும் மிக்கவனாக அவன் அருகே சென்று அவனைத் தடவிக் கொடுத்தான்.

"முனிவரின் சீடரே! யாசிப்பது பெருமை தருவதல்ல. விரும்பியதைக் கேட்டுப் பெற நினைப்பதும், கேட்டதும் மற்றவர் அதனைத் தந்திடல் வேண்டும், அதுவே அவர் கடமை என நினைப்பதும் தவறு. கேட்டதை ஒருவர் தராவிடில் அவரை நிந்திப்பதோ, சபிப்பதோ பெருந்தவறு. பிறர் தமது உழைப்பால் பெற்ற செல்வத்தை, ஒருவித உரிமையுமின்றிக் கேட்பது முறை தவறிய செயல். அதனையே உதவியாகப் பணிவுடன் கோரலாம். கொடுப்பதும், கொடுக்காததும் அவரது விருப்பம் என்பதை மதித்துத் தராவிடில் வருந்தாமல் திரும்பிச்

செல்லலாம். நீர் பெற்ற கல்வி பணிவையும், அடக்கத்தையும் தரவில்லை. நீர் பிறரை மதிக்கக் கற்றுக் கொள்ளவில்லை. உமது கல்வி பயன் தரவல்லதல்ல. உண்மை கல்வியைப் பெறவே உமது குரு உம்மிடம் குருதக்ஷிணையாகக் குதிரைகளைக் கேட்டுள்ளார். இப்போது உலகம் உமக்கு இதனைப் போதித்திருக்கும். என்னிடம் தானம் தரக் குதிரைகள் இல்லை. அவற்றை வணிகர்களிடமிருந்து வாங்கப் போதிய தங்கம் தருகிறேன். குதிரைகளை வாங்கிக் குருவிடம் அர்ப்பணம் செய்வீர்” என்றான்.

விசித்திரசித்தனின் விசித்திரமான கல்வி போதனை சீடரிடம் வினயத்தையும், பண்பையும், அடக்கத்தையும் பிறரை மதிக்கின்ற பாங்கையும் அறிமுகப்படுத்தியது. அவன் நல்ல மாணவன் ஆனான்.

## ஸனாதன தர்மப்புதிர்கள்

### மார்ச் விடைகள்

1. அம்மனின் கர்ணபீடம் எங்குள்ளது?
2. திருவதிகையில் உள்ள சிவன்
3. திருமாலின் சயனக்கோலங்கள் எத்தனை?
4. சிவபெருமானின் ப்ரதோஷ நிருத்யம் பெயர் என்ன?
5. சிவபெருமானுக்கு எத்தனை ப்ரதக்ஷினம்
6. தந்தை சொல் தட்டாத தனயன்
7. சிந்து நதியின் உத்பத்திஸ்தானம்
8. காஞ்சியில் வேதாந்த தேசிகரின் கோயில் உள்ள இடம்
9. தன் கையை சந்தனக்கட்டையாக தேய்த்து சிவ பூஜை செய்தவர்
10. ஒருபுறம் பெருமாள் கோயில் இன்னொரு புறம் சிவன் கோயில் இடைப்பட்ட இடத்திற்கு என்ன பெயர்?


# EKA DHINA KOTI GAYATHRI JAPAM



**With the blessings of Sri Acharyas, Jagadguru**
**Sri Sankara Baghawat Padhal Panchami Seva Trust**
**and**
**“Sri Sankara TV” Invite all Andanars to participate in the**
***“Eka Dhina Koti Gayathri Japam”*, to pray for the wellbeing of humanity.**

**Date: 1-May-2020**

**Venue: Valluvar Gurukulam Higher Secondary School, West Tambaram, Chennai - 45**

**Commencing Time: 5:30 A.M to 8:30 A.M Prasadam: 12:30 PM onwards**


Please register with your ***Name, Age, Gothram, contact number*** by **SMS / Whatsapp** to

**6382308117 / 6382152792/ 7358210965**

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# தென்னிந்திய ப்ரோஹிதர் சங்க மணி விழா - ஆசியுரை



தென்னிந்திய ப்ரோஹிதர் சங்கத்தினுடைய மணிவிழாவை நோக்கி நடந்து கொண்டு இருக்க கூடிய இந்த சந்தர்ப்பத்தில் பெரியவர்களுடைய ஆசியும், அன்பும், ஆதரவும், இந்த அமைப்புக்கு பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. அந்த ஆசிர்வாதங்களின் காரணமாகவும், லௌகீகமான ஆதரவின் காரணமாகவும், இந்த சபையானது தொய்வில்லாமல் நடைபெற்று வருகிறது..

சாஸ்திரத்தின் அடிப்படையிலே, ப்ரோஹிதர் என்பவர் மனிதர்களுக்கு மட்டுமல்ல, தேவர்களுக்கும் முக்கியமானவர். அவர்களுக்கு ஒரு ப்ரோஹிதர் மூலமாகத்தான், அவர்கள் எதிர்பார்க்ககூடிய நன்மைகளை பெறமுடியும். அதே போன்று, மணியன் அவர்கள் சொல்லும் போது, ப்ரோஹிதர்களை முதலிலே ஏற்பாடு செய்தால், உங்களுடைய வாழ்நாள் முழுவதும், நீங்கள் ஒரு நல்ல வழிகாட்டியை பெற்று, நல்ல ஆசிர்வாதங்கள் பெற்று, நீங்கள் சிறப்பாக வாழமுடியும். எஜமானர்களின் நல்ல எண்ணத்தை, அவர்களுக்கு தேவையான சக்தியை, ஈஸ்வரனுடைய அனுக்ரஹத்தின் மூலமாக பெற்று தருபவர் ப்ரோஹிதர்கள்.

தெய்வீகமான, அதாவது தெய்வத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள், குறையும் பொழுதோ, தவறும் பொழுதோ அல்லது தவறாக செய்யும் பொழுதோ, ஏற்படக்கூடிய இன்னல்களை தவிர்க்க கூடிய மந்திர சக்தியின் மூலமாக, அந்த கஷ்டங்களை எல்லாம் போக்க கூடிய சக்தி படைத்தவர்கள் ப்ரோஹிதர்கள்.

இப்படி பிறருடைய நன்மையைக் கருதி பொது சேவையை செய்பவர்கள் ப்ரோஹிதர்கள். இந்த நக்ஷத்திரத்திலே பெண் பிறந்து இருக்கிறாளா, இந்த நக்ஷத்திரத்திலே ஆண் பிறந்து இருக்கிறாரா, பெயர் வைப்பதிலிருந்து ஆரம்பித்து,

அவர்களுக்கு வாழ் நாள் முழுவதும் ஈஸ்வர அனுக்ரகம் கிடைக்க வேண்டும், க்ரஹ தோஷங்கள் ஏதாவது இருக்குமானால், அந்த பரிஹாரம் செய்யப்பட வேண்டும், வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்க கூடிய ஜாதகத்தை இந்த ப்ரோஹிதர் இடத்தே காண்பித்து, என்ன சாந்தி பரிகாரங்கள் செய்ய வேண்டும் என்கிற மக்களுடைய நம்பிக்கையை, ஈஸ்வரனுடைய அனுக்ரஹத்தை பெற்று தருபவர்கள் இந்த ப்ரோஹிதர்கள். ஆகவே, இது வெறும் ஒரு வேலை வாய்ப்பு மாத்திரம் அல்ல. இது ஒரு பொது சேவை. இது ஒரு பக்தியை வளர்க்க கூடிய சேவை. இது ஒரு அத்தியாவசியப் பணி.

திரு ஆற்காடு நரஸிம்ஹ அய்யர் அவர்கள் பெருமுயற்சியை மேற்கொண்டு, உழைத்து, சமய சந்தர்ப்பத்திற்கு தகுந்தவாறு, எங்கெல்லாம் இந்த ப்ரோஹிதர்களின் அமைப்பை பற்றியும், ப்ரோஹிதர்கள் என்கிற ஸ்தானத்தைப் பற்றியும் அனைவருடைய கவனத்திற்கும் எடுத்துச் சென்று, அவருடைய நண்பர்களை பலரையும் இதிலே இணைத்து, பல்வேறு பொது அமைப்புகளை நடத்திக்கொண்டு இருக்க கூடிய அனைவரையும், ஒரு குடையின் கீழ் அழைத்து, வரவைத்து, இப்படியாக ஒரு இயக்கமாக மாற்றினார். இயக்கத்தை சார்ந்தவர்களோடு அவருக்கு பழக்கம் உண்டு. இந்த ப்ரோஹிதம் என்ற ஒரு கலையானது, ஒரு சேவையானது, ஒரு விஞ்ஞானமானது, ஒரு நம்பிக்கை தரக்கூடிய இந்த முறையானது தடைபடக் கூடாது என்ற நோக்கத்தோடு, இந்த இயக்கம் தேவைப்படுகிறது.

எத்தனயோ இயக்கங்கள் இருக்கின்றன. இது புதியதாக ஏற்படுத்தப்பட்ட முறையல்ல. ப்ரோஹிதம் என்பது பரம்பரை பரம்பரையாக மாத்திரம் அல்ல. தேவர்களுக்கே ப்ரோஹிதர்கள் தேவைப்பட்டார்கள் என்று சொல்லும் போது, இந்த ப்ரோஹிதர்களின் அவசியத்தன்மை, necessity என்பது எல்லோராலும் உணரப்பட வேண்டியது.

புஸ்தகம் கிடைக்கவில்லை, சொல்லித் தருபவர்கள் கிடைக்கவில்லை ப்ரோஹிதர்கள் கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கக் கூடாது. அதை மனதில் வைத்துக்கொண்டே இந்த நவீனக் கல்வியுடன் சேர்ந்த, ஜோதிஷ பாட சாலை, திண்டிவனம் ஸ்ரீராம் ஸ்கூல், முரளி ரெட்டியார் முயற்சியின் மூலமாக, இந்த வருஷம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சமஸ்கிருதம், ஜோதிஷம், தென்னாற்காடு- கடலூர், விழுப்புரம் மாவட்டத்து கோவில்களின் ஸ்தல மாஹாத்மியம், இதை எல்லாம் சொல்லித் தரவேண்டும் என்கிற அபிப்ராயத்தோடு ஆரம்பிக்கப்பட்டு இருக்க கூடிய இந்த பாடசாலையிலே, முதல் வருஷமே நிறைய பேரை சேர்த்து இருக்கிறார்கள்.

இந்த ப்ரோஹிதர்களுக்கு அவர்களின் குடும்பத்தினுடைய ஒத்துழைப்பு வேண்டும். இது போன்ற நல்ல பணிகளை செய்வதற்கு குடும்பத்தினுடைய ஆதரவும், அபிமானமும் தேவை. அப்பொழுதான் அவர்கள் இந்த அரிய பணியிலே தொய்வின்றி ஈடுபட முடியும். இந்த புரோகிதர்கள் உலகத்தின் பார்வையில் வித்யாசமாக இருக்கிறார்கள். ஆனால் நமது பார்வையில் விசேஷமாக இருக்கிறார்கள். சட்டை போட்டுக் கொள்வதில்லை. விபூதி இட்டுக் கொள்ளுகிறார்கள். ருத்ராக்ஷம் போட்டுக் கொள்ளுகிறார்கள். தர்ப்பை வைத்துக் கொள்கிறார்கள்.

ப்ரோஹிதர்கள் சங்கம் மூலமாக, பல்வேறு சேவைகளும், காரியக்க்ரமங்களும், மரம் நடுவது, புயலால் பாதிக்கப் பட்டவர்களுக்கு தேவைப்பட்ட பொருள்களை உதவுவது, ஆயிரம் விளக்கு பூஜை செய்வது, சமஷ்டி உபநயனம் பண்ணுவது, இது போன்ற பல தொண்டுகளும் நடை பெற்று வருகின்றன.

இந்தப் பணிகளை நீங்கள் தொய்வின்றி, நல்ல பலத்துடன், குடும்பத்து ஒத்துழைப்புடன், இதை எல்லாம் செய்வதற்கு முயற்சிக் கொண்டு இருக்கிறீர்கள். இந்த தர்மப் பிரச்சாரமானது, பெரியவர்களுடைய ஆசி பெற்றது. இந்த ஆசிர்வாதத்துடன், அவர்களுடைய அன்பு, ஆதரவு, ஆசியுடன் நடைபெறக்கூடிய இந்த, தென்னிந்திய ப்ரோஹிதர் சங்கத்தினுடைய மணிவிழா மாநாடும் நல்ல முறையிலே மேன்மேலும் நடைபெற்று வர ஆசீர்வதிக்கிறோம்.

**ஜெய ஜெய சங்கர , ஹர ஹர சங்கர**


॥ ஸ்ரீ: ॥

இனி பழைய புத்தகங்களை மீண்டும் Type செய்ய தேவையில்லை.

பழைய புத்தகங்கள் 20, 30, 50, 70 வருட புத்தகங்களை

Typing செய்யாமலே பிழைகளை திருத்தி புதிய வடிவில் (New font) மாற்றி

எல்லா மொழிகளிலும் (All Languages) அச்சிட்டு தரப்படும்.

க்ரந்தம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம்

எல்லா மொழிகளிலும் டைப் செய்து அச்சிட்டு தரப்படும்.

(Transliteration in all Languages done here.)

Grantham to Devanagiri, Grantham to Tamil,

மற்றும் வேத ப்ரமாண புத்தகங்கள் உபநிஷத்துக்கள்

உதாத்தம், அனுதாத்தம் இவற்றுடன்

அச்சிட்டு தரப்படும்.

Contact : V.K.N. Enterprises (Printer)

Mylapore, Chennai - 600 004 Phone : 98402 17036, e:mail : vknprinter@gmail.com

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## ப்ரஹ்லாத சரித்திரம்

ஸ்ரீமத் பாகவத சுலோகங்கள் அடிப்படையில்

32. **ப்ரஹ்லாதன் :** தந்தையே ! எனக்கு மட்டுமல்ல. மக்களுக்கு இருக்கின்ற வரப்போகின்ற எல்லோருக்கும் அவன்தான் பிரம்மம். கொடுப்பவன், காப்பாற்றுபவன் ஏன் எல்லாமே அந்த பரமேச்வரனான பகவான் தான், இதற்கு தாங்கள் ஏன் கோபப்பட வேண்டும்.

33. **ஹிரண்யகசிபு :** எவனோ ! உன் மனதில் புகுந்து கொண்டு, கெடுமதியாளனும், பாபியுமாகிய, உன்னை இப்படிப்பட்ட நன்மையற்ற வார்த்தைகளை சொல்லும்படி செய்கிறான்.

34. **ப்ரஹ்லாதன் :** தந்தையே! அவன் என் இதயத்தில் மட்டுமல்ல உலகில் உள்ள எல்லோருடைய இதயத்தையும், தன் வயப்படுத்திக் கொண்டு இருக்கிறான். எனது மட்டுமல்ல உன்னுடைய, எல்லோருடைய செயல்களிலும் எங்கும் வியாபித்து நடத்துகிறான் அது மட்டுமல்ல.

35. அவன் புராண புருஷன் அசையும் பொருள் அசையாப் பொருள் எல்லாவற்றிலும் நிறைந்து எல்லாவற்றிற்கும் காரணமான அந்த விஷ்ணு அருளட்டும்.

36. **ஹிரண்யகசிபு :** கொடியவன் இவனைக் கொன்று விடுங்கள். இவன் உயிர் வாழ்வதில் அர்த்தம் இல்லை. நம் கொள்கைக்கு ஊறுவிளைவிக்கும் கோடாரிக்காம்பாகி விட்டான்.

37. இவ்வாறு ஆணையிடப்பட்டதும் நூற்றுக்கணக்கான அசுரர்கள் சிறந்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு ப்ரஹ்லாதனை அழிப்பதற்காக எழுந்தனர்.

38. **ப்ரஹ்லாதன் :** அசுரர்களே! உங்களுடைய ஆயுதங்களிலேயும், என்னிடத்தில் இருப்பது போல விஷ்ணு இருக்கிறார். அந்த ஸத்யத்தின் பேரில் சொல்கிறேன். உங்களுடைய ஆயுதங்கள் என்னை அழிக்காது.

39. அதன்பின்னர் பல அசுரர்கள் ஆயுதக்கூட்டங்களால் ப்ரஹ்லாதனை அடித்தபோதும் பிரஹ்லாதன் சிறிது கூட வேதனையடையாது, மீண்டும் புதியவனாகவே தோற்றமளித்தான்.

40. **ஹிரண்யகசிபு :** கெடுமதியாளனே ! எதிரியின் துதிகளை நிறுத்து. உனக்கு நான் அபயம் கொடுக்கிறேன். வெகுமுட்டாளாக நடந்து கொள்ளாதே.

41. **ப்ரஹ்லாதன் :** பயமா ! பயங்களை எல்லாம் போக்குகின்ற அந்த பகவான் என் மனம் முழுவதும் நிற்கிறான். அவன் இருக்கும் மெய்மையால் ஜன்மம், மரணம், (பிறப்பு, இறப்பு) பயமெல்லாம் போய்விடுமல்லவா.

42. **ஹிரண்யகசிபு :** கொடிய பாம்புகளை அழைத்து, பொய்யானவனும், மிகவும் தீய புத்தியுள்ளவனுமான இவனை, விஷத்தீயினால் உடனே கொல்ல அழைத்துச் செல்லுங்கள்.

43. இப்படிச் சொன்னவுடன் கொடிய பாம்புகளான தக்ஷகன் முதலியவைகள் ப்ரஹ்லாதன் உடல் முழுவதும் விஷம் நிறை பற்களால் கடித்தனர்.

44. **ஸர்ப்பங்கள் :** அப்படிக் கடித்த ஸர்ப்பங்கள் ‘பற்கள் உடைந்து மணிகளும் தெரிக்கின்றன. படங்களில் தாபமும், நெஞ்சில் நடுக்கமும் ஏற்படுகிறது. இருந்தும் அவனது தோல்களை எங்களால் தொளைக்கவே முடியவில்லை. அசுரேந்திரா ! வேறு ஏதாவது செய்ய முடிந்தால் செய்யுங்கள்’.

**45.** **ஹிரண்யகசிபு :** ஹே! திசை யானைகளே! தொல்லை கொடுக்கும் தந்தங்களை உடையவர்களே ! எப்படி அரணிக்கட்டையின் நெருப்பு அரணிக்கட்டையை அழிக்குமோ அப்படி என் எதிரி பக்ஷமாகவே உள்ள இவன் அழிவிற்காக மோதுங்கள்.

46. பூமியில் உள்ள மலைச் சிகரங்கள் போன்ற உயர் திசை யானைகள் தரையில் விழுந்த ப்ரஹ்லாதனை பயங்கர கொம்புகளால் தாக்கின.

47. ‘யானைகள் குலிசங்களோடு கூடிய கொம்புகள் (தந்தம்) பொடியாகி விட்டன. இது என்னுடைய பலத்தால் அல்ல. பெரிய விபத்துகளாம் வெம்மையைப் போக்கியது ஜனார்த்தனனை விடாமல் ஸ்மரித்துக் கொண்டிருப்பதால் தான்’ ப்ரஹ்லாதன்.

(தொடரும்)

# ஸ்ரீமத் தேவி பாகவதம் - 4

பி. ஆர். கண்ணன்



அப்படியும் மாறுதல் ஒன்றும் ஏற்படாததால், வியாஸர் மிதிலைக்குச் சென்று, ஜனக மகாராஜாவிடம் பாடம் கேட்குமாறு சுகரிடம் கூறினார். ஜனகர் ராஜகாரியங்கள் செய்துகொண்டே, ஜீவன் முக்தராக இருப்பதை பிதாவிடமிருந்து அறிந்த சுகரால் அதை ஒப்புக்கொள்ள முடியவில்லை. இருந்தாலும், பிதாவின் ஆக்ஞைக்குக்கட்டுப்பட்டு, கால்நடையாகவே மூன்று வருஷகாலம் மேரு, இமயமலைகளைக் கடந்து மிதிலை வந்தடைந்தார். அங்கு த்வாரபாலகனால் நிறுத்தப்பட்டு தன் வரவினை தெரிவித்து கொண்டார். பின் மந்திரியினால் ராத்திரி தங்கவைக்கப்பட்ட பவனத்தில், அவருடைய தேஜஸினால் காமவசப்பட்ட பல ஸ்திரீகளின் உபசாரங்களை சற்றும் பொருட்படுத்தாமல், சுகர் ராத்திரியின் முதல் யாமத்தை ஸந்தியை, தியானம் என்றும், இரண்டாம், மூன்றாம் யாமங்களை தரையில் தர்ப்பைப்படுக்கையில் நித்திரையிலும், நான்காம் யாமத்தை தியானம், பிராதக்கிரியைகளிலும் கழித்தார். இவ்வாறு ஜனகர் வைத்த பரீக்ஷையில் தேறிய சுகரைக் காலையில் ஜனகரே வந்து உபசரித்து, காராம்பசுவை தானம் செய்து, விசாரித்தபின், சுகர் தன் பிதாவின் விருப்பம்பற்றிக் கூறி, மோக்ஷமார்க்கத்தைப்பற்றி உபதேசிக்குமாறு வேண்டினார். ஜனகர் விஸ்தாரமாகப்பதிலளிக்கையில், ஆசிரம வரிசைப்படி முன்னேறுவதே சரியான வழி; கிருஹஸ்தனின் 40 ஸம்ஸ்காரங்களுக்குப்பின், 8 ஸம்ஸ்காரங்கள் (விவேகம், வைராக்கியம், சமம், தமம், உபரதி, திதிக்ஷை, சிரத்தை, ஸமாதானம்) மூலம் மனதை அடக்கி, ஞானஸித்தி

பெறுவதே முறையான மார்க்கம்; இந்திரியங்கள் பலமானவை, கட்டிலில் படுத்தவன் கீழே விழலாம், ஆனால் தரையில் படுப்பவனுக்கு பயமில்லை; ஸந்யாஸி திரும்பவும் கிருகஸ்தாஸ்ரமத்திற்கு வந்தால் பதிதனாவான்' என்றார். சுகர் ஆக்ஷேபித்தார். ஜனகர், 'தேகம் தன்னுடையது என்ற எண்ணமே பந்தம்; தேகம் தன்னுடையதில்லை என்ற உறுதியே முக்தி; கிருஹஸ்தாச்ரமத்தில் இருந்துகொண்டே, ஆனந்தமாக இருக்கமுடியும்.' **ந பத்தோஸ்மீதி புத்யாஹம் ஸர்வதைவ ஸுகீ முநே। த்வம் து துஃகீ ஸதைவாஸி பத்தோஹமிதி ஸங்கயா ।।** 'முனிவரே, நான் பந்தப்படவில்லை என்கிற புத்தியினால், எப்போதுமே ஆனந்தமாக இருக்கிறேன். பந்தப்பட்ட எண்ணத்தினால் நீ எப்போதுமே துக்கமாக இருக்கிறாய்.' என்று இறுதியாக உபதேசித்தார். சுகரும் இப்போது கிருஹஸ்தாஸ்ரமத்தில் நுழைவதற்கு ஒப்புக்கொண்டார். மஹான்களின் ஸாந்நித்திய விசேஷம் எப்பேர்ப்பட்டது என்பதை இங்கு வியாஸர் நமக்கெல்லாம் உணர்த்துகிறார். சுகர் ஜனகரை நமஸ்கரித்து, வியாஸரிடம் சென்று கூறுகையில், வியாஸரின் ஆனந்தத்திற்கு அளவில்லை. பித்ருக்களின் கன்னிகையான பீவரி என்ற பெண்ணை சுகர் விவாகம் செய்து கொண்டார். நான்கு புத்திரர்களும், ஒரு புத்திரியும் பிறந்தனர். தன் பிரம்மஞான நிலையிலிருந்து சிறிதும் வழுவாமலேயே இருந்த சுகர் ஒரு நாள் கைலாஸ சிகரத்திலிருந்து மேலே பறந்து சென்றார். வியாஸர் பிரிவாற்றாமையால் சுகா, சுகா என்று உரத்தகுரல் கொடுக்கவே, எல்லா மரங்களிலிருந்தும் எதிரொலி கேட்டது. சுகர் பிரம்ம ஸாயுஜ்யத்தை அடைந்த காரணத்தினால் மரங்களும் பதில் கூறின. வியாஸர் அழுதுகொண்டிருக்க, சிவன் வந்து தரிசனம் கொடுத்து சொன்னார்: 'உன் புத்திரன் யாருக்கும் கிடைக்காத உயர்ந்த முக்தியை அடைந்தான். ஞானியாகிய நீ வருந்துவது தகாது' என்று. வியாஸர் பின்னரும் மனமுடைந்திருக்கவே, சமாதானமாக சிவன் 'சுகரின் ஒளிபொருந்திய நிழல் எப்போதும் உன்கூடவே இருக்கும்' என்று வரம் அருளி மறைந்தார்.

(வளரும்)

# பங்குனி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 14/03/2020 | சனி | காரைடையான நோன்பு |
| 14/03/2020 | சனி | அனுஷம் தேர் |
| 15/03/2020 | ஞாயிறு | அனுஷம் பாராயணம் |
| 16/03/2020 | திங்கள் | மூலம் தேர் |
| 18/03/2020 | புதன் | உத்ராடம் தேர் |
| 19/03/2020 | வியாழன் | உத்ராடம் பாராயணம் |
| 19/03/2020 | வியாழன் | ஏகாதசி |
| 20/03/2020 | வெள்ளி | துவாதசி |
| 21/03/2020 | சனி | ப்ரதோஷபூஜை |
| 21/03/2020 | சனி | அவிட்டம்தேர் - பாராயணம் |
| 25/03/2020 | புதன் | தெலுங்கு வருட பிறப்பு - உகாதி வசந்த நவராத்ரி ஆரம்பம் |
| 02/04/2020 | வியாழன் | ஸ்ரீராம நவமி |
| 03/04/2020 | வெள்ளி | ஸ்ரீ ராம பட்டாபிஷேகம் |
| 04/04/2020 | சனி | ஏகாதசி |
| 05/04/2020 | ஞாயிறு | துவாதசி - ப்ரதோஷபூஜை |
| 07/04/2020 | செவ்வாய் | பௌர்ணமி பூஜை, பங்குனி உத்திரம் |
| 09/04/2020 | வியாழன் | ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி பூஜ்ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் பீடாரோஹன ஜயந்தி |
| 11/04/2020 | சனி | அனுஷம் தேர் - பாராயணம் |
| 13/04/2020 | திங்கள் | மூலம் தேர் |
| 20/03/2020, 27/03/2020, 03/04/2020 -10/04/2020 வெள்ளிக்கிழமை பூஜை | | |
| | | |

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 22

## மஞ்சக்குடி வெங்கட் ராம சாஸ்திரிகள்



நான் தஞ்சை ஜில்லா திருவசனல்லூர் வேத பாடசாலையில் 1941ஆம்வருடம் ஸேர்ந்து வேப்பத்துர் ஸீதாராம சாஸ்த்ரிகளிடம் வேத அத்யயனம், காவ்யபாடங்கள் இவைகளை படித்துவந்தேன். பெரியவாளுடைய மேதா விலாஸத்தை அடிக்கடி சொல்வார். எல்லா சாஸ்த்ரங்களையும் வாசித்தவர் என்று அவரைக் கொண்டாடுவார். அவர் வாசிக்க நிறைய உதவிகளையும் செய்தார்கள். தர்மஞ்ய ஸார்வ பௌம எனும் பரீக்ஷையில் தேறி அவருடைய நன் மதிப்பைப் பெற்றவர்.

1951ஆம் வருடம் கும்பகோணம் பாடசாலையில் வேப்பத்துர் வைத்யனாத சாஸ்த்ரிகளிடம் வேதாந்தம் வாசித்தேன். ஸ்டைபண்ட் ரூபாய் 25. நான் கூட கொஞ்சம் பணம் கேட்டேன். ரூபாய் 10 தான் கேட்டேன். சபா செகெரெடரி சினிமா பார்க்க பணம் கூட கேட்கிறாயா? என்று கோபித்து கொண்டு பணம் தர மறுத்துவிட்டார். என் ஆசிரியர் பெரியவாளிடம் சொல்லவும் 10ரூபாய் வாங்கிக்கொள்ளவும், உடனே போகவும் என்று சொல்லிவிட்டார். அப்போ ஸ்ரீபெரியவா காஞ்சீபுரத்திலிருந்தார். நானும் அவர் இருந்த இடத்திற்கு போனேன். இரவு 2மணி இருக்கும். பெரியவா என்னிடம் எப்படி வாசிக்கிறாய்? நன்றாக சிந்தனை செய்து வாசி. எதற்கு வந்தாய்? என்றார்கள்.

நானும் ஸ்டைபன்ட் 10 அதிகம் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் ரூ 25தான் வருகிறது கேட்டால் செகரடரி சினிமா பார்க்க கேட்கிறாயா என்று சொல்லுகிறார். சினிமா பார்த்ததே கிடையாது. வாடகையே 10ரூபாய் மீதி 15இல் காலம் தள்ளுவது கடினம் என்று கூறினேன். பெரியவா அவனைத் தப்பா நினைக்காதே. நல்லவர். அவர் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நீ நன்னா படி என்று ஆசீர்வதித்து அனுப்பினார்கள். நான் வந்த இரண்டு தினங்களுக்குப்பின் ரூ 120 மணியார்டர் வந்தது. ஐந்து வருஷம் வாசித்தேன். ஐந்து வருஷங்களும் ரூ120 பெரியவா அனுப்பி வைத்தார். கருணைக்கு ஈடு உண்டோ. ப்ரஸ்தானத்த்ரயம் வாசித்தபின் ஸ்ரீமடத்தில் பாஷ்ய பாடம் சொல்ல எற்பாடு செய்தார்கள். உபாத்யாராக நியமனம் ஆன பின் அங்கு பாஷ்யபாடம் சொல்லி வந்தேன். இப்படி பல பேரிடம் சிக்ஷை ஆயிற்று.

அப்போது பிஸ்கோத்து ஸ்ரீனிவாச சாஸ்த்ரிகள் மூலம் மதம் ரூ 300 கி படைத்து வந்தது. நான் சதாராவில் பெரியவாளைப் பார்க்கப் போனபோது ஸ்ரீனிவாஸ சாஸ்த்ரிகளைக் காண்பித்து இவந்தான் ஒனக்கு படி அளக்கிரானோ என்று விசாரிக்க அவர் அபசாரம் அபசாரம் என்று கூறி நமஸ்காரம் செய்ததை இன்றும் நினைக்கிறேன்.

காலை 8 மணி அளவில் வாக்யார்த்தம் சொல்ல எனக்கு உத்தரவு கிடைத்தது. மனு ஸ்ம்ருதி வாக்யார்த்தம் சொன்னேன். பெரியவா ரசித்துக் கேட்டார். அப்போது வைத்யனாத தீக்ஷிதீயத்திற்கு சுருக்கம் எழுதச் சொன்னார். அதில் சில இடங்களில் திருத்தம் செய்தார். க்ரிடிகலாக எழுதாதே சித்தாந்தமாக எழுது என்றார்கள்.

இந்த புத்தகத்திற்கு பெயர் பெரியவாதான் வைக்கணும் என்று புதுக்கோட்டை பாலசுப்ரமண்யம் அபிப்ராயப்பட்டார். நான் ஸம்ட்க்ஷேப தர்ம சாஸ்த்ரம் என்று வைக்க நினைத்தேன். பெரியவா சிறிது நேரம் யோசித்து ஸம்ட்க்ஷேப தர்ம ஸாஸ்த்ரம்'' என்று வை என்றார்கள். எனக்கு ஆச்சர்யமாயிருந்தது. அவர் த்ரிகால ஞ்யானி. யார் எதை நினைத்தாலும் அவருக்குத்தெரியும் என்று போலகம் ராமசாஸ்த்ரிகள் சொல்லுவார்கள். அதை அன்று நினைத்துக்கோண்டேன். இப்படி என் வாழ்வு முழுவதும் அனுக்ரஹம் செய்தவரை நாளும் நினைக்கிறேன்.

பெரியவா சரணம் பெரியவா சரணம்.

## மகாகவி
# காளிதாஸரின் விஷ்ணு துதி

*ரகுவம்சம் 10ஆம் ஸர்கம் 16இலிருந்து 33வரை*

**नमो विश्वस्रुजे पूर्वम् बिभ्रते ।**
**अथ विश्वस्य सम्हर्त्रे तुभ्यम् त्रेधा स्थितात्मने ।। १ ।।**

**நமோ விஸ்வஸ்ருஜே பூர்வம் ததனு பிப்ரதே ।**
**அத விசவஸ்ய ஸம்ஹர்த்ரே துப்யம் த்ரேதா ஸ்திதாத்மனே ।।**

*முதலில் உலகத்தை ஆக்கியவரும் பின்பு காப்பவரும் அதையே அழிப்பவருமான மும்மூர்த்திகளாய் இருப்பவருக்கு வணக்கங்கள்.*

**रसान्तराण्येकरसम् यथा दिव्यम् पयो अश्नुते**
**देशेदेशे गुणेष्वेबप्रवप्रवस्तासि स्त्वम् अविक्रियः ।।२ ।।**

**ரஸந்தராண்யேகரஸம் யதா திவ்யம் பயோ அஸ்னுதே**
**தேசே தேசே குணேஷ்வேவ ப்ரவஸ்தாஸி ஸ்த்வம் அவிக்ரிய: ।।**

*ஒரே சுவையை உடைய ஆகாத்திலுண்டான நீர் அந்த அந்த இடங்களில் வெவ்வேறு சுவைகளை அடைகிறதோ அதுபோல் மாறுதல்லில்லாத நீர் ஸத்வம் முதலிய குணங்களில் ப்ரம்மனாயிருத்தல் தன்மைகளை அடைகிறீர்.*

**अमेयो मितलोकस्त्वम् अनर्थी प्रर्थनावहः**
**अजितो जिष्णुरत्यन्तम् अव्यक्तो व्यक्तकारणम् ।। ३ ।।**

**அமேயோ மிதலோகஸ்த்வம் அனர்தீ ப்ரார்தனாவஹ:**
**அஜிதோ ஜிஷ்ணுரத்யந்தம் அவ்யக்தோ வ்யக்தகாரணம் ச ।।**

*நீர் அளவிடற்கரியர் அளக்கப்பட்ட உலகத்தை உடையவர், விருப்பற்றவர் விருப்பத்தைத் தருபவர், ஜயிக்கப்படாதவர் எப்போதும் ஜயிப்பவர், மிகவும் புலனாகாதவர் வெளிப்படையான பொருள்களுக்கெல்லாம் காரணமானவர்.*

**हृदयथ्मनासन्नम् अकामम् त्वाम् त्पस्विनम्**

**दयालुमन्घस्परुष्टम् पुराणम् अजरम् विदु: ।। ४ ।।**

*உம்மை இதயத்திலிருப்பவராகவும் அருகில் இல்லாதவராகவும் ஸையற்றவராகவும், தவம்புரிபவராகவும், தயாளுவாகவும், துயரத்தால் தொடப்படாதவராகவும், பழமையானவராகவும் முதுமையில்லதவராகவும் முனிவர்கள் அறிவார்கள்.*

*(கவி சொல்லும் முரணைக்கவனிக்கவும்)*

**सर्वग्यस्त्वम् अविग्यातसर्वयोनिस्त्वम् आत्मभू :**

**सर्वप्रभुरनीश्स्त्वअमेकस्त्वम् सर्वरूपभाक् ।। ५ ।।**

*நீர் எல்லமறிந்தவர்.பிறரால் முற்றிலும் அறியப்படாதவர்.எல்லாவற்றிற்கும் காரணமானவர், ஆனால் ஸ்வயம்பூ. நீர் எல்லவற்றிற்கும் தலைவர், ஆனால் தலைவரற்றவர். நீர் ஒருவரே எல்லா வடிவங்களையும் உடையவர்.*

**सतसामोपगीतम् त्वाम् सप्तार्णव जलेश्यम् ।**

**सप्तार्चिमुखम् आचख्युस्सप्तलोकैकसम्श्रयणम् ।। ६**

**ஸப்த ஸாமோபகீதம் த்வாம் ஸப்தார்ன்வ ஜலேசயம்**
**ஸப்தார்சிமுகம் ஆசக்யுஸ்ஸப்தலோகைகஸம்ஸ்ரயணம் ।।**

*உம்மை ஏழுவகை ஸாமங்களால் பாடப்பட்டவராகவும் ஏழ் கடல் நீரில் சயனிப்பவராகவும்,ஏழு நாக்குடைய அக்னியை வாயாக உடையவராகவும் ஏழுலகங்களுக்கு ஒப்பற்ற அடைகக்கலமாகவும் பெரியோர் கூறுவர்.*

**चतुर्वर्गफलम् घ्यानम् कालावस्थस्चथुर्युग;**

**चतुर्वर्णमयो लोकस्त्वतसर्वम् वतुर्मुखात् ।। ७**

*நான்கு புருஷாரத்தங்களின் பயனான மெய்யறிவும் நான்கு யுக கால அளவுகளும் நான்கு வர்ணங்கள் கொண்ட உலகமும் ஆகிய இவை அனைத்தும் நான்கு முகங்களை உடைய ப்ரமம்மனான உம்மிடமிருந்து உண்டானவை.*

*(தொடரும்)*

# வாழ்வின் நான்கு நிலைகள்

இராமாயணம்

## க்ருஹஸ்தன்

இல்லறத்தான் விடியற் காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு சூரியன் உதிப்பதற்கு முன் ஸ்நானம் செய்ய வேண்டும். இதற்கு ப்ராஜாபத்ய ஸ்நானம் என்று பெயர். இங்ஙனம் செய்ய எல்லா பாபங்களும் விலகும். அங்ஙனம் நீரில் ஸ்நானம் செய்து கொள்ள முடியாதவர் மந்திர ஸ்நானம், பஸ்ம ஸ்நானம் செய்து கொள்ளலாம். இங்கனம் ஏதாவது 3 ஸ்நானம் செய்யாமல் நித்ய கர்மாக்களைச் செய்யக் கூடாது. பிரம்மசாரி காலையில் மட்டும் ஸ்நானம் செய்ய வேண்டும். கிருஹஸ்தனும் வானப்ரஸ்தனும் காலையிலும், நடுப்பகலிலும் ஸ்நானம் செய்ய வேண்டும்.

ஸன்யாஸி காலை, நடுப்பகல், மாலை என மூன்று காலங்களிலும் ஸ்நானம் செய்ய வேண்டும். ஸந்த்யா காலங்களில் காயத்ரி, பஞ்சாக்ஷரி, அஷ்டாக்ஷரி முதலிய மஹா மந்திரங்களை ஜபிக்க வேண்டும். இத்தகைய மந்திர ஜபங்கள் அறியாமல் செய்த பாபங்களைப் போக்கி மனதின் மாசியை நீக்கித் தூய்மைப்படுத்தும். மந்திரஜபம் ஆயிரம் முறை செய்வது உத்தமம். நூறு முறை ஜபிப்பது மத்யமம். பத்து முறை ஜபிப்பது அதமம். அதே போன்று மந்திரங்களை மனதிற்குள் ஜபிப்பது உத்தமம். வாயசைத்து சத்தம் வெளிவராமல் ஜபிப்பது மத்யமம். உரத்த குரலால் ஜபிப்பது அதமம்.

இங்கனம் ஜபம் செய்யும் போது அடுத்தவர்களை தொடுதல், அவர்களுடன் பேசுதல், உலக விஷயங்களை நினைத்தல், தொலைக்காட்சி பார்த்தல், கேட்டல் ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும். இங்கனம் முக்காலங்களில் செய்ய, இரவில் செய்த பாபங்கள், விடியற் காலையிலும் பகலில் செய்தவை, நடுப்பகலிலும், மாலையில் செய்தவை மாலையிலேயே விலகும். இங்கனம் தினமும் செய்ய வேண்டிய கர்மாக்களை செய்யாமல் வரும் கிருகஸ்தன் எந்தவித வேறு கர்மங்களையும் செய்ய தகுதி அற்றவனாக ஆவதுமன்றி மரித்த பிறகு, தாழ்ந்த பிறகு எடுக்கின்ற நிலைக்குத் தள்ளப்படுகிறான். பிறப்பு, இறப்பு தீட்டுக்கள் ஏற்பட்ட காலங்களிலும் ஸந்த்யாவந்தனம் செய்வதை விடாமல் செய்து வர வேண்டியது மிக அவசியமானது. இதனை விடக்கூடாது. அப்படிச் செய்யும் போது பிராணாயாமம் இன்றி மந்திரங்களை மனதிற்குள் செய்ய வேண்டும். இல்லறத்தான் கீழ்கண்டவாறு இருப்பதைத் தவிர்க்க வேண்டும். 1. நாத்திகன் 2. வேத ஆகம சாஸ்திர நிந்தை, 3. தெய்வ நிந்தை, 4. துவேஷம், 5. கர்வம், 6. கோபம், 7. பிறரைத் துன்புறுத்துதல்,

*8. பெரியோர்களை அவமதித்தல், 9. குரு நிந்தனை, 10. கோள் சொல்லுதல். தனது கடமைகளை விடாது நல்ல முறையில் செய்து வரும் இல்லறத்தானை திருவள்ளுவர் தன் திருக்கறள் 5-10 ல் மிகவும் உயர்வாகப் போற்றியுள்ளார்.*

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

*கிருஹஸ்தனை நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.*

*1. வார்த்தர விருத்தன். 2. யாயாவரன், 3. சாயன வ்ருத்தன், 4. சோர ஸன்யாசிகள்*

***வார்த்தா வ்ருத்தன் :*** *விவசாயம், பசுக்கள் காத்தல், வியாபாரம் ஆகியவற்றை பிறர் நிந்தனைக்கு ஆளாகாமல் முறைப்படி நடத்துபவன்.*

***யாயாவரன் :*** *வேதத்தை ஜபித்து யாகம் செய்து செய்வித்து, தானம் கொடுத்து வாங்கி அலைந்து திரிந்து வாழ்பவன்.*

***சாயன வ்ருத்தன் :*** *வேதம் ஓதி, யாகம் செய்து, தானம் கொடுத்து வாழ்ந்து பிறர்களிடம் பிரதி பிரயோஜனமாக பொருள் பெற்று வேதம் ஓதுவித்து, யாகம் செய்வித்து, தானம் வாங்கி வாழ்க்கை வாழாமல் வீட்டில் இருப்பவன்.*

***சோர ஸன்யாசிகள் :*** *தினமும் ஊஞ்சவிருத்தி செய்து அதனால் கிடைத்ததைக் கொண்டு மனத் திருப்தியுடன் அமைதியாக வாழ்பவன்.*

*உஞ்ச வ்ருத்தி எடுத்தல் என்பது பழைய காலத்தில் கடைப்பிடித்து வரப்பட்டது. பகவான் நாமங்களைச் சொல்லிக் கொண்டு வீடுகளில் தானே மனமுவந்து அளிப்பதை ஏற்று கொணர்ந்து வீட்டில் சமைத்து ஒரு அதிதிக்கு உணவளித்து உண்பது என்பது ஒருமுறை. இங்கனம் சொல்வதில் தனக்கு அளித்தவர்கள் யாவர்க்கும் அதிதிக்கு உணவளித்த பலன் கிடைக்க செய்பவன். மற்றொரு முறை உண்டு. தானிய களத்தில் மிச்சம் வைத்திருப்பதை எடுத்து வந்து உணவாக்கி சந்ததிக்கு அளித்து உண்டு வாழ்வது.*

*இல்லறத்தான் கடைபிடிக்க வேண்டிய முறையினை இங்கு சொல்லப்பட்டுள்ளது. எவ்வளவு பின்பற்ற முடியுமோ அவரவர் சக்திக்கு ஏற்ப பின்பற்ற இது உதவும் என்ற நோக்கத்தில் எழுதப்பட்டுள்ளது. தற்காலத்தில் இது நடைமுறைக்கு ஒவ்வாதது என்று கருதினாலும் நம் முன்னோர்கள் எங்ஙனம் இல்லறத்தார்களாக வாழ்ந்துள்ளார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காகவாவது இது பயன்படும் என்று இங்கு இந்தக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. இனி அடுத்த நிலையிலான வானப்ரஸதத்தை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.* *(தொடரும்)*

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

## துணிவு தந்த தொந்தரவு

முன் யுகத்தில் நாரத மகரிஷி இந்த்ரலோகம் சென்றார். அவர் வருகையை தேவர்கள் கொண்டாடினர். இவரது வருகைக்காக இந்த்ரன் ஒரு தனி நாட்ய கச்சேரியை ஏற்படுத்தினான். ஆனால் நாரதரோ இதை மறுத்துவிட்டு யாரேனும் ஒரு சிறந்த அப்சரஸ் பாடட்டும் நடனம் ஆடட்டும் என்றார். தேவர்கள் அப்சரஸ்கள் இவர்களுக்குள் யார் சிறந்த அப்ஸரஸ் என்று குழப்பம் வந்துவிட்டது. இந்த்ரன் பார்த்தான். நாரதரையே தேர்ந்தெடுக்கச் சொன்னான். அவர் கூறினார். '' உங்களில் யார் தவம் இயற்றும் துர்வாஸ முனிவரின் தவத்தைக் கெடுக்கிறாளோ அவளே சிறந்த அப்சரஸ்'' என்றார். அனைவரும் பயந்தனர். துர்வாஸரின் கோபத்தை உணர்ந்த அப்ஸரஸ்கள் பின்வாங்கினர். ஆனால் வபு என்னும் ஓர் அப்ஸரஸ் மட்டும் துணிந்தாள், துர்வாஸர் இருக்குமிடம் நடந்தாள். வபுவும் இமயமலைச்சாரலுக்குச் சென்று துர்வாஸர் இருந்த இடத்திற்குச் சென்றாள். தவம் செய்து கொண்டிருந்த அவரிடத்திற்கு அருகில் இருந்த மரத்தில் அமர்ந்து பாடலானாள். என்ன கானம் என்ன குரல் கானகம் முழுவதும் நிரம்பி ததும்பியது. மதுரகானம் கேட்ட முனிவரும் தன் தவம் தடைபட்டதை அறிந்து காரணத்தை அறிய அவள் இருக்குமிடம் வந்தார். அவர் வருகையைக் கண்ட வபு தன் அங்க லாவண்யத்தைக் காட்டி நடனமும் செய்தாள். முனிவருக்கு வந்ததே கோபம். ''நீ இந்த அப்ஸரஸ் உருவத்தை இழந்து பறவையாய் போய் 16 வருடங்கள் காட்டில் திரி. உனக்கு நான்கு குட்டிகள் பிறக்கும். போர் ஆயுதத்தால் உயிர் போனபின் ஸ்வர்கம் போ'' என்று சபித்தார். தன் அசட்டுத் துணிச்சலை எண்ணி வருந்திய வபு விசனத்துடன் பாடிக்கொண்டே போயிற்று.

பறவையினத்தில் கருடனுக்கு ஒப்பான இரு பறவைகள் இருந்தன. கங்கன் கந்தரன் என்று பெயர். இருவரும் ஸகோதரர்கள். ஒரு சமயம் குபேரனின் வாஸஸ்தலம் அருகில் பறந்து போய்க்கொண்டிருந்தது. அங்கே வித்யுத்ருமன் என்னும் அரக்கன் தன் மனிவி மந்தனீகாவுடன் தனிமையில் இருந்தான். இப்பறவை கங்கன் எழுப்பிய சப்தத்தைக் கேட்ட அவன் கோபம் கொண்டு விரட்ட அதற்கு கங்கன் ஏய் அரக்கனே உனக்கு எவ்வளவு சொந்தமோ இவ்விடம் அவ்வளவு எனக்கும் சொந்தம்'' என்று கூற அவன்

கோபம் கொண்டு அதைக் கொன்றான். கந்தரனுக்கு கன்கன் மரணம் தெரிய வர அரக்கனைக் கண்டு நேருக்கு நேர் போர் செய்ய அழைத்தான். வாழ்வா சாவா எனும்படி யுத்தம் நிகழ்ந்தது. இறுதியில் தன்னுடைய கூறிய நகங்களால் அரக்கனைக் கொன்றான். பயந்துபோன மந்தனீகா தான் மேனகையின் பெண், தன்னை பலவந்தமாக அரக்கன் இழுத்துவந்ததாகத் தெரிவித்து தான் கந்தரனை மணம் செய்துகொள்ள விரும்புவதாகவும் சொன்னாள். அவள் அப்ஸரஸாகையால் தன் விருப்பப்படி எவ்வுருவும் எடுக்க முடியும் என்று கூறி பறவையாகி கன்தரனுடன் பல வருடங்கள் வாழ்ந்தாள்.

அவளுக்கு ஒரு பெண் குட்டி பிறந்தது. அதற்கு தார்க்ஷி என்று பெயர் சூட்டினார்கள். அது வேறு யாருமில்லை. துர்வாஸாரின் சாப விமோசனத்துக்காக காத்திருந்த வபு எனும் அப்ஸரஸ்தான். அசட்டுத்துணிச்சலினால் தொந்தரவுக்கு ஆளான அப்ஸரஸ் வபு இவ்வாறு சாபவிமோசனம் அடைந்தாள்.

(மார்கண்டேய புராணம்)

## கடவுளை அடையும் மார்க்கம்

*மனிதனுக்கும் மற்றப் பிராணிகளுக்கும் உள்ள வித்தியாசம் பகுத்தறிவு ஒன்றுதான். அதைகைய அறிவை உபயோகப்படுத்தி மனிதன் பிறவிப் பயனை அடைதல் வேண்டும்.*

*கடவுள் பக்தி ஒன்றுதான் மனிதனை இம்மையிலும் காத்து மறுமையிலும் நிலையான ஆனந்த நிலை தரவல்லது. பக்தி என்ற சொல்லுக்கு, கடவுளை ஸதா சேவித்தல் என்று அர்த்தம். கடவுளைச் சேவிப்பதற்கு ஒன்பது விதமான மார்க்கம் ஸ்ரீமத் பாகவதத்தில் சொல்லப்பட்டுள்ளது. அவையாவன: கடவுளின் பெருமையைக் காதால் வேட்பது, கடவுளின் பெருமையை வாயால் வர்ணிப்பது, எப்பொழுதும் கடவுளையே நினைப்பது, கடவுளின் திருவடியை ஆராதிப்பது, பூஜிப்பது, நமஸ்கரிப்பது, தொண்டு செய்வது, கடவுளுடன் பிரியாமல் எப்பொழுதும் கூட இருப்பது, கடவுளுக்கு தன்னையே அர்ப்பிப்பது.*

*இம்மாதிரியான பக்தி நிலையை முறையே பரீக்ஷித், சுக மகரிஷி, ப்ரஹ்லாதன், லக்ஷ்மி, ப்ருது சக்ரவர்த்தி, அக்ரூரர், அநுமான், அர்ஜுனன், பலி மகாராஜர் முதலானோர் கடைபிடித்து, பக்தியின் க்ரமம் வேறாக இருந்தாலும் ஒரேவிதப் பலனையுடைய மேக்ஷானந்தத்தையே எல்லோரும் அடைந்துள்ளார்கள்.*

*நாமும் இவ்விதமாகக் கடவுள் சம்பந்தத்துடனேயே இருந்து அழிவு இல்லாத பரம்பொருளுக்கு எல்லாவற்றையும் அர்ப்பித்து ஜன்ம சாபல்யமடைய, பகவான் அருள்புரிவாராக.*

*--ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்.*

# மஹிஷாஸுரமர்தினி ஸ்தோத்ரம்

अयि रणदुर्मद शात्रुवधोदित दुर्धारनिर्जशक्तिभृते
चतुरविचारधुरीण महाशिव दूतकृत प्रमथाधिपते ।
दुरितदुरीहदुराशयदुर्माति दानवदूतकृतान्तमते
जय जय हे महिषासुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। ५।।

**அயிரண துர்மத சத்ரு வதோதித துர்தர நிர்ஜர சக்தி ப்ருதே**
**சதுர விசார துரீண மஹாசிவ தூதக்ருத ப்ரமதாதிபதே**
**துரித துரீஹ துராசய துர்மதி தானவ தூத க்ருதாந்தமதே**
**ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்தினி ரம்யகபர்தினி சைலஸுதே. ।5।**

*அருவிபோல் எதிரிகளின் பிணக்குவியலைப் பொழிகின்ற ஆற்றல் பெற்றவளே, பகுத்து ஆராய்வதில் வல்லவரான சிவபெருமானை எதிரிகளிடம் தூதாக அனுப்பியவளே தீய சிந்தனையையும் கெட்ட நோக்கமும் கொண்ட அசுரர்களை அழிப்பவளே, மஹிஷாசுரனை அழித்தவளே அழகாகப் பின்னிய கூந்தலை உடையவளே, மலை மகளே ஜய ஜய என்று உன்னைப் போற்றுகிறேன்.*

अयि शरणागतवैरिवधूवर वीरवराभयदायकरे
त्रिभुवनमस्तक शूलविरोधि शिरोधिकृतामलशूलकरे ।
धुमिधुमितामर दुन्दुभिनाद महोमुखरीकृतदिग्मकरे
जय जय हे महिषासुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। ६।।

**அயி சதகண்ட விகண்டிதருண்ட விதுண்டித சுண்ட கஜாதிபதே**
**ரிபுகஜகண்டவிதாரனசண்ட பராக்ரமசுண்ட ம்ருகாதிபதே**
**நிஜபுஜதண்ட நிபாதிதகண்ட விபாதிதமுண்டபடாதிபதே**
**ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்தினி ரம்யகபர்தினி சைலஸுதே. ।6।**

*தஞ்சம் அடைந்த எதிரிகளின் மனைவியருக்கும்,சரணடைந்த வீரர்களுக்கும் அடைக்கலம் தந்து காத்தவளே, முவ்வுலகுக்கும் தலைவியே எதிரிகளின் கழுத்தில் த்ரிசூலத்தை நாட்டியவளே தும் தும் என்று முழங்கும் துந்துபி நாதத்தை வெட்கப்பட செய்யும் கம்பீரமான குரலை உடையவளே மஹிஷாஸுரனை அழித்தவளே மலைமகளே ஜய ஜய என்று உன்னை போற்றுகிறேன் .*

# ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி

*108 அத்வைத வாசகங்கள்*

*பி. ஆர் கண்ணன், மும்பை*

मिथ्याग्यान अपायस्च भ्मात्मैकत्व विग्यानात् भवति 20

**மித்யாஞ்யானாபாயாச்ச ப்ரம்மாத்மைகத்வவிஞ்யானாத் பவதி**

*ப்ரம்மாஸூத்ர பாஷ்யம் 11414*

*ப்ரம்மனும் ஜீவனும் ஒன்றே எனும் பார்வை மித்யாஞ்யானத்தை அழித்துவிடும்.*

न अवगतब्रह्मात्मभावस्य यतापर्वम् श्म्सारित्वम् शक्यम् दर्शयितुम् 21

**ந அவகதப்ரமாத்மபாவஸ்ய யதாபர்வம் ஸம்ஸாரித்வம் சக்யம் தர்சயிதும்**

*( ப்ரம்மஸூத்ர பாஷ்யம் 1-4-4-4)*

*ஜீவ ப்ரம்ம ஐக்யமில்லாது போனால் ஒவ்வொரு நிலையிலும் ஜீவனுக்கு ஸம்சாரித்வத்தைப் பார்க்க வேண்டியிருக்கும்.*

प्रतिषिध्यत एव परमार्थत: सर्वग्यात्परमेश्वरात् अन्यो दृष्टा श्रोता वा 22

**ப்ரதிஷித்யத ஏவ து பரமார்தத: ஸர்வஞ்யத பரமேஸ்வராதன்யோ த்ரஷ்டா ஸ்ரோதா வா**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம் 1-1-6 17)*

*பார்ப்பவன் கேட்பவன் இவைகள் பரமாத்மனுக்கு அன்னியமானவை, ப்ரதிஷேதமானவை.*

वचनादि क्रियाव्याप्रुतस्यैव अत्मन: ब्रह्मात्वम् दर्शयति 23

**வசனாதி க்ரியாவ்யாப்த்ருதஸ்யைவ ஆத்மன: ப்ரம்மத்வம் தர்சயதி**

*(ப்ரம்ம ஸூத்ர பாஷ்யம் 1-2-11-31)*

*ஆத்மாவின் ப்ரம்மத்வம் உடலின் வெவ்வேறு இயக்கங்களால் தெரிகிறது.*

नहि जीवो नामात् अन्तभिन्नो ब्रह्मण: 24

**ந ஹி ஜீவோ நாமாத்யன்தபின்னோ ப்ரம்மண:**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம் 1-1-11 31)*

*ஜீவன் என்று எதைச்சொல்லுகிறோமோ அது ப்ரம்மணைத்தவிர வேறு அல்ல.*

न च सर्वसयैकात्मत्वे रागादय: सम्भवन्ति 25

**ந ச ஸர்வஸ்யைகாத்மத்வே ராகாதய: ஸம்பவந்தி**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம் 1-2-1-1)*

*ஜீவனும் ப்ரம்மமும் ஒன்று என்று தெரியும்போது ராக த்த்வேஷங்கள் வரா.*

श्रुतिस्तु परमात्मनो अन्यम् आत्मानम् वारयति 26

**ஸ்ருதிஸ்து பரமாத்மனோ அன்யம் ஆத்மானம் வாரயதி**

*(ப்ரம்ம ஸூத்ர பாஷ்யம் 1-2-1-6)*

*பரமாத்மாவிலிருந்து ஜீவாத்மா வேறு என்பதை ஸ்ருதி தடுக்கிறது.*

ग्रुहीते त्वात्मकैत्वे बन्ह्द्मोक्षदि सर्व व्यवहार परिसमाप्तिरेव स्यात् 27

**க்ருஹீதே த்வாமைகத்வே பந்தமோக்ஷாதி ஸர்வவ்யவஹார ஸமாப்தி: ஏவ ஸ்யாத்**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம் 1-2-1-4)*

*ஜீவ ப்ரம்ம ஐக்யத்தை உணர்ந்தவுடன் பந்தமோட்சம் எனும் வ்யவஹாரம் முடிவுக்கு வரும்.*

नहि परस्मादात्मनो अन्य: कश्चित् आत्मा सम्सारी विध्यते 28

**ந ஹி பரஸ்மாதாத்மனோ அன்ய: கச்சித் ஆத்மா ஸம்சாரீ வித்யதே**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம் 1-2-1-6)*

वेतनस्य क्षेत्रस्य भोक्त्रुत्वम् ब्रहमस्वभावताम् च वक्ष्यामिति 29

**சேதனஸ்ய க்ஷேத்ரஸ்ய அபோக்த்ருத்வம் ப்ரம்மஸ்வபாவதாம் ச வக்ஷயாமிதி.**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம் 1-2-4-12)*

*ப்ரம்மனின் போக்தா இல்லாத தன்மையை, அது சைதன்ய மாத்ரம் என்பதை கூறுகிறேன்.*

सर्वम् ब्रह्मेति सामानाधिकरण्यम् प्रपन्चप्रविलापनारथम् 30

**ஸர்வம் ப்ரம்மேதி ஸாமானாதிகரண்யம் ப்ரபஞ்சப்ரவிலாபனார்தம்**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம் 1-3-1-1)*

*ப்ரபஞ்ச நாசமடைவதற்காகவே எல்லாம் ப்ரம்மமயம் எனும் ஸாமானதிககரணம் .*

*(தொடரும்)*

# ஸ்ரீமடம் முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

ஸ்ரீமடம்முகாம் 27.01.2020 திங்கட்கிழமை அன்று வீனஸ் காலனி ஆஸ்திக சமாஜத்திலிருந்து புறப்பட்டு அம்பத்தூர் சின்னதிருப்பதி ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள் ஆலயத்திற்கு ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர ஸ்வாமி பூஜையுடன் சென்றடைந்தது. ஸ்ரீ பெரியவாளுக்கு அம்பத்தூர் மஹாஜனங்கள் திரளாகக் கூடி ப்ரும்மாண்டமான வரவேற்பு அளித்தார்கள். முகாமிற்கான ஏற்பாடுகளை அம்பத்தூர் ஸ்ரீ திருநாவுக்கரசு மற்றும் ஸ்ரீ அசோக் திறம்பட ஏற்பாடு செய்திருந்தனர். ஸ்ரீ ஜெயராமன் அவர்கள் எல்லா வைபவங்களிலும் பங்கேற்று சிறப்பித்தார்கள்.

அம்பத்தூரில் ஒரு தன்னார்வலர் நடத்தும் ‘ஆனந்தம்’ என்னும் வ்ருத்தாஸ்ரமத்திற்கு விஜயம் செய்து அங்கு தங்கியிருக்கும் முதியோர்களுக்கு ஆசி வழங்கினார்கள். இந்த முதியோர் இல்லத்தின் சிறப்பு- எந்த வருமானமும், எந்த ஆதரவும் இல்லாத முதியோர்களை மட்டும் இங்கு அனுமதிக்கிறார்கள். மேலும் ஏழை மாணவ மாணவிகளுக்கு குறிப்பாக கிராமப் புறத்திலிருந்து வருபவர்களுக்கு சிறப்பு பாடங்கள் நடத்தப்படுகின்றன.

அம்பத்தூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஸ்ரீ ஆச்சார்யஸ்வாமிகள் பங்கேற்றார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

1. 28.01.20 அன்று மாலை அம்பத்தூர் தான்தோன்றீச்வரர் கோவிலுக்கு விஜயம்
2. 29.01.20 அன்று அம்பத்தூர் G.K. ஷெட்டிவிவேகானந்தாவித்யாலயா பள்ளிக்கு விஜயம்
3. ஸ்ரீ அன்னபூர்ணேச்வரிஸமேத ஸ்ரீ ஆத்மநாதேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் மற்றும் பைரவர் ஆலயங்களுக்கு விஜயம்.
4. 30.01.2020 அன்று அம்பத்தூர் ஆன்மீக ஸமாஜத்திற்கு விஜயம்
5. 01.02.2020 அன்று பெரம்பூர் ஸ்ரீ விவேகானந்தாவித்யாலயாஜூனியர் காலேஜ் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுமார் 13 பள்ளிகளைச் சேர்ந்த 10வது மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு ஆசி வழங்கினார்கள். அங்கு சங்கரா-விவேகானந்தா சட்ட உதவி மையம் மற்றும் குடும்ப ஆலோசனை மையம் ஆகியவற்றை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தொடங்கி வைத்தார்கள்.

6. அன்று மாலை 6.00 மணியளவில் பெரம்பூர் ஸ்ரீ சங்கராலயத்திற்கு விஜயம். அருகிலிருக்கும் பெரம்பூர் அன்னதான சமாஜத்திற்கும் விஜயம்.

7. 02.02.2020 அன்று அம்பத்தூர் விநாயகர் கோவில், கொரட்டூர் மஹாசக்தி விநாயகர் கோவில்,

8. அம்பத்தூர் விவேகானந்தா பள்ளி வளாகத்தில் ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங்கத்தினர் நடத்திய சிறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று ஆசி வழங்கினார்கள்.

03.02.2020 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில்அம்பத்தூரிலிருந்து புறப்பட்டு ஆந்திர மாநிலம் நெல்லூருக்கு ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் எழுந்தருளினார்கள். நெல்லூருக்குப் போகும் வழியில் அம்பத்தூர் ஐயப்பன் ஆலயத்திற்கும் விஜயம் செய்தார்கள்.

அன்று இரவு சுமார் 10 மணி அளவில் நெல்லூர் நகருக்கு ஸ்ரீ ஆச்சார்யஸ்வாமிகள் விஜயம் செய்தார்கள். நெல்லூர்வாசிகள் ஸ்ரீ ஆசார்யாளுக்கு சிறப்பான வரவேற்பு அளித்தார்கள். சுமார் 15 நாட்கள் அங்கு தங்கி ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர் ஸ்வாமி பூஜை நடத்தினார்கள். இந்த சமயத்தில் பல்வேறு கும்பாபிஷேகங்களில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பங்கேற்று நடத்தி வைத்தார்கள், அவை பின்வருமாறு

05.02.20 புதனன்று ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி ஆலய கும்பாபிஷேகம்.

07.02.20 வெள்ளியன்று ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய கும்பாபிஷேகம்.

முன்னதாக தஞ்சை ப்ருஹதீஸ்வர ஸ்வாமி கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 04.02.20 மற்றும் 05.02.20 ஆகிய தேதிகளில் ஸ்ரீமடத்தின் சார்பாக 34 வேத வித்வான்களைக் கொண்டு சதுர்வேத மூல பாராயணம் ஸ்ரீ ஆசார்யாள் அனுக்ரஹத்துடன் நடைபெற்றது.

09.02.20 அன்று பௌர்ணமியன்று நெல்லூர் சங்கரமடத்தில் சிறப்பு சண்டியாகம் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான மக்கள் திரளாக பங்கேற்றனர். ஸ்ரீ ஆசார்யாள் முன்னிலையில் பூர்ணாஹுதி நடைபெற்றது.

10.02.20 அன்று நெல்லூர் மாவட்டம் புசிரெட்டிபாளையம் கிராமத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள சங்கரமடத்தில் அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள்.

*13.02.20 அன்று நெல்லூர் மாவட்டம் இசக்கப்பள்ளி கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அண்ணபூர்ணாம்பா சமேத ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலய கும்பாபிஷேகம்.*

*அன்று மாலை ப்ரபல பாடகரான திரு எஸ்.பி.பாலசுப்ரமண்யம் நெல்லூர் நகரில் உள்ள தனது பூர்வீக வீட்டினை ஸ்ரீமடம் மூலம் சமஸ்க்ருத பாடசாலை அமைக்க வேண்டி ஸ்ரீமடத்திற்கு சமர்ப்பணம் செய்த நிகழ்ச்சி நடைபெற்றது.*

*நெல்லூர் நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் அமைந்துள்ள ஸ்ரீ அபய ஆஞ்சனேய ஸ்வாமி கோவில், ஸ்ரீ ப்ரஸன்ன ஆஞ்சநேய ஸ்வாமி கோவில், ஸ்ரீ மஹாலக்ஷ்மி கோவில் விஜயம்.*

*14.02.20 அன்று தெற்கு அமலூரில் உள்ள மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் நடத்தி வைத்தார்கள்.*

*16.02.2020 நெல்லூர் சங்கரமடத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 66வது பீடாதிபதிகளான ஸ்ரீ சந்த்ரசேகர சரஸ்வதி VI ஸ்வாமிகளின் ஆராதனை விழா சாஸ்த்ரோக்தமாக நடைபெற்றது.*

*17.02.2020 மூன்று கால பூஜைகளையும் முடித்துக்கொண்டு சென்னை திரும்பும் வழியில் கும்மிடிப்பூண்டி அருகே அமைந்துள்ள ஸ்ரீ சிட்டி எனும் இடத்திற்கு சென்று ஆசி வழங்கினார்கள்.*

*18.02.20 முதல் சென்னை வீனஸ் காலனி ஆஸ்திக சமாஜத்தில் முகாம் தொடர்கிறது.*

*21.02.20 வெள்ளிக்கிழமை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகளின் 52வது ஜயந்தி விழா ஆஸ்திக சமாஜத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 5.30 மணி அளவில் ஸ்ரீ ஆசார்யாள் விஸ்வரூப தர்சனம் அளித்தார்கள். திரளான பக்தர்கள் வந்திருந்து ஸ்ரீ ஆசார்யாள் அனுக்ரஹம் பெற்றனர். திருப்பதி திருமலை ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயிலிலிருந்து நிர்வாக அதிகாரி மற்றும் தலைமை பட்டாச்சார்யர்கள் ப்ரஸாதம் கொண்டு வந்து ஸ்ரீ ஆசார்யாளிடம் சமர்ப்பித்தனர். காஞ்சி காமாக்ஷி அம்பாள் கோவில், தஞ்சாவூர் பங்காரு காமாக்ஷி அம்மன் கோவில் மற்றும் திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி கோவில் மற்றும் பல்வேறு கோவில்களிலிருந்து கொண்டு வரப்பட்ட ப்ரஸாதங்கள் ஸ்ரீ ஆசார்யாளுக்கு வழங்கப்பட்டன. பூஜை முடிந்த பிறகு ஜயந்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட காம்யார்த்த ஹோமங்களின் கலச நீரைக்கொண்டு ஸ்ரீ ஆசார்யாளுக்கு*

அபிஷேகம் செய்யப்பட்டது. 52 ஸுவாஸினிகள், 52 கன்யாபெண்கள், 52 வடுக்கள், 52 தம்பதிகள் ஆகியோருக்கு பூஜை செய்யப்பட்டது. பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் நடைபெற்றது. 21.02.2020 முதல் 8 நாட்களுக்கு ரிக் சம்ஹிதா யக்ஞம் ஆஸ்திக சமாஜத்தில் நடைபெறும். ஜயந்தியை முன்னிட்டு 18.02.20 முதல் 20.02.20 வரை மூன்று நாட்கள் சதுர்வேத பாராயணம் நடைபெற்றது. இது தவிர காஞ்சீபுரத்திலும் ஸ்ரீமடம் கிளைகளிலும் ஜயந்தி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அன்று மாலை சிவராத்திரி- சுமார் 7.00 மணியளவில் சிவராத்திரி முதல் கால பூஜையை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தொடங்கினார்கள். தொடர்ந்து 10 மணிநேரம் நான்கு கால சிறப்பு பூஜைகளையும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் நடத்தினார்கள். நான்குகால பூஜைகளையும் திரளான பக்தர்கள் தர்சனம் செய்தார்கள். மறுநாள் காலை 6.30 மணி அளவில் சிவராத்ரி பூஜை முடிந்து ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தீர்த்த ப்ரஸாதம் வழங்கினார்கள்.

24.02.20 அன்று ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 67வது பீடாதிபதிகளான ஸ்ரீ மஹாதேவேந்த்ர சரஸ்வதி V ஸ்வாமிகளின் ஆராதனை விழா சென்னையில் சாஸ்த்ரோக்தமாக நடைபெற்றது.

26.02.20 அன்று சென்னை ஆதம்பாக்கம் ஸ்ரீ சங்கரமடத்தில் உள்ள ஆதிசங்கரர் ஸ்தூபிக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

சென்னை நுங்கம்பாக்கம் சைல்ட் ட்ரஸ்ட் ஹாஸ்பிடல் வளாகத்திலுள்ள ஸ்ரீ பாலவிநாயகர் கோவில் கும்பாபிஷேகமும் ஸ்ரீ ஆசார்யாள் முன்னிலையில் நடைபெற்றது. அந்த வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் திருவுருவச்சிலையையும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் திறந்து வைத்தார்கள்.

தொடரும்

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

*பருப்பொருள்களின் இயல்பு*

**அத்ராபி சதுர்வித ஸகலஸ்தூலசரீரமேகானேக புத்தி விஷயதயா வனவத் ஜலாசயவத் வா ஸமஷ்டிர்வ்ருக்ஷவத் ஜலவத் வா வ்யஷ்டிரபி பவதி ॥ 110**

*நான்கு விதமான சகல பருப்பொருள்களும் புத்தி விஷயத்தில் வனம் என்றும் ஜலாசயம் என்று ஸமஷ்டியிலும் மரம் ஜலபிந்து என்று வ்யஷ்டியிலும் கூறப்படும்.*

**ஏதத் ஸமஷ்டி உபஹிதம் சைதன்யம் வைஸ்வானரோ விராட் இதி உஸ்யதே ஸர்வ நராபிமானித்வாத் த்விவிதம் ராஜமானத்வாத் ச ॥ 111**

*பஹுத்வமாயிருப்பதாலும் எல்லா உடலிலும் அபிமானம் இருப்பதாலும் இந்த ஸமஷ்டி சைதன்யம் வைஸ்வானரன், விராட் என்று இரு விதமாகச் சொல்லப்படும்.*

**அஸ்யைஷா ஸமஷ்டி: ஸ்தூல சரீரமன்னவிகாரத்வாத் அன்னமகோச: ஸ்தூலபோக ஆயதனவாத் ச ஸ்தூல சரீரம் ஜாக்ரத் இதி ச வ்யபதிஸ்யதேநச 112**

*அன்னத்தின் மாறுபாடாயும் பருப்பொருள்களை அனுபவிப்பதாலும் இந்த விராட்டின் ஸமஷ்டி ஜாக்ரத் என்று சொல்லப்படும்.*

**ஏதத் வ்யஷ்டி உபஹிதம் சைதன்யம் விஸ்வ இதி உஸ்யதே.ஸூக்ஷ்ம சரீர அபிமானம் அபரித்யஜ்ய ஸ்தூலசரீராதி ப்ரவிஷ்டத்வாத் ॥ 113**

*இந்த ஸ்தூல சரீரத்தில் நுழைவதாலும் ஸூக்ஷ்ம சரீரத்தின் அபிமானம் இல்லாதிருப்பதாலும் வ்யஷ்டி சைதன்யம் விஸ்வம் எனப்படும்.*

**அஸ்யாப்யேஷா வ்யஷ்டி: ஸ்தூலசரீரமன்னவிகாரத்வாத் ஏவ ஹேதோரன்னமயகோசோ ஜாகரத் இதி ச உச்யதே ॥ 114**

*அன்னமய விகாரத்தால் உண்டான அன்னமயகோசமுடைய இந்த வ்யஷ்டி ஜீவன் ஜாக்ரத் அவஸ்தையில் உள்ளது என்பர்.*

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம். டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

*ஸுபத்ரா ஸுஷுவே வீரபிமன்யும் நரர்ஷபம்*
*க்ருஷ்ணஸ்ய ஸத்ருசம் சௌர்யம் வீர்யே ரூபே ததா*
*ஆக்ருதௌ ।।*



வீரத்திலும் பராக்ரமத்திலும் க்ருஷ்ணனை ஒத்த அபிமன்யு எனும் புதல்வனை ஸுபத்ரைப் பெற்றாள்.

*ய்திஷ்டிராத் ப்ரதிவிந்த்யம் சுதஸோமம் வ்ருகோதரம்*
*அர்ஜுனாத் ஸ்ருதகர்மாணம் சதானீகம் நாகுலிம்*
*ஸஹதேவாத் ஸ்ருதசேனமீதான் பஞ்ச மஹாரதம்*
*பாஞ்சாலீ ஸுஷுவே வீரான் ஆதித்யான் அதிதிர்யதா ।।*

அதிதி எப்படி ஆதித்யர்களை ஈன்றாளோ அவ்வாறு யுதிஷ்டிரர் மூலம் ப்ரதிவிந்த்யனையும், பீமனிடமிருந்து ஸுதஸோமனையும் அர்ஜுனன் மூலம் ஸ்ருத கர்மாவையும் நகுலன் மூலம் சதானீகனையும், ஸஹதேவன் மூலம் ஸ்ருதஸேனனையும் (ஐந்து மகாரதர்களை) ஈன்றாள்.

*திவ்யகர்போமை:புத்ரைர் வ்யூடோரஸ்கைர் மஹாரதை:*
*அன்விதா [ராஜசார்தூல] பாண்டவா முதமாப்னுவன் ।।*

தேவபுத்ரர்கள் போலிருந்த அப்பிள்ளைகளுடன் பாண்டவர்கள் மகிழ்ந்திருந்தனர்.

*தத; கதிபயாஹஸ்ய பீபத்ஸு; க்ருஷ்ணம் அப்ரவீத்*
*உஷ்ணானி க்ருஷ்ண வர்தந்தே கச்சாவோ யமுனாம் ப்ரதி ।।*

சில நாட்கள் கழித்து அர்ஜுனன் வெயில் உக்ரமாயுள்ளது நாமிருவரும் யமுனைக்குப் போவோம் என்று க்ருஷ்ணனிடம் கூறினான்.

*ஆமந்த்ர்ய தௌ தர்மராஜம்னுஞ்யாப்ய ச [பாரத]*
*தத்ர கத்வா மஹாத்மனௌ ரேமாதே பார்தமாதவௌ ।।*

*தர்மரின் அனுமதி கேட்டு அவ்விருவரும் யமுனையில் விளையாடினர்.*

***அப்யாகச்சததா விப்ர: ப்ரதப்தகனகப்ரப:***
***ஸோ அப்ரவீதர்ஜுனம் சைவ வாஸுதேவம் ச ஸாத்வதம் ।।***

*உருக்கிய தங்கம் போல் நிறம்கொண்ட ஓர் அந்தணன் அப்போது அவர்களிடம் வந்தான்.*

***பிட்சோ வார்ஷ்ணேயபார்த்தீ வாம் பாவகம் மாம் நிபோததம்***
***ஸ யுவாப்யாம் ஸஹாயாப்யாம் அஸ்த்ரவித்ப்யாம் ஸமாகத:***
***தஹேயம் காண்டவம் தாவமெததன்னம் வ்ருதம் மயா ।।***

*''அன்பர்களே நான் அக்னி என் பசிக்கு இந்த காண்டவ வனத்தை உண்ணப் போகிறேன், உங்கள் படைக்கலங்களால் எனக்கு உதவி செய்யவும்'' என்று அவர்களிடம் ப்ரார்த்தித்தான்.*

***ப்ராதாச்சைவ தனூரத்னமக்ஷய்யௌ ச மஹேஷூதீ***
***ரதம் ச திவ்யாஸ்வயுஜம் கபிப்ரவரகேதனம் ।।***

*அர்ஜுனனுக்கு அவர் சிறந்த வில் ஒன்றையும் இரு அம்பராத் தூணிகளையும் குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு தேரையும் கபி உருவம் பொறிக்கப்பட்ட பதாகையையும் தந்தார்.*

***வஜ்ரனாபம் ததச்சக்ரம் ததௌ க்ருஷ்ணாய பாவக: ।***

*க்ருஷ்ணனுக்கு வஜ்ர நாபம் எனும் ஆழியைத் தந்தார்.*

***தத: பாவகம் ப்ரூதாம் ப்ரஹ்ருஷ்டாவர்ஜுனாச்யுதௌ***
***காமம் ஸம்ப்ரஜ்வல அத்யைவ கல்யௌ ஸ்வச்ஸாஹ்யகர்மணி ।।***

*அவ்விருவரும் மிகவும் மகிழ்ந்து இப்போதே வனத்தை எரி. நாங்கள் உதவுகிறோம் என்றனர்.*

***ஏவமுக்த: ஸ பகவான் தாஸார்ஹேண அர்ஜுனேன ச***
***ததாஹ காண்டவம் தாவம் யுகாந்தமிவ தர்சயன் ।।***

*அவர்கள் அப்படி சொன்னதும் அக்னி பகவான் காண்டவ வனத்தை ஊழித்தீபோல் கொளுத்தினார்.*

***காண்டவஸ்ய விப்ரோக்ஷார்த்தம் ப்ரவவர்ஷ ஸுரேஸ்வர:***

***த்ச்சரைரர்ஜுனோ வர்ஷம் ப்ரதிஜக்னே அத்யமர்ஷித: ।।***

*இந்த்ரன் காட்டுத்தீயை அழிக்க பொழிந்த மழையை அர்ஜுனன் தன் அஸ்த்ரங்களினால் முறியடித்தான்.*

***தஸ்மின் வனே தஹ்யமானே ஷடக்னிர் ததாஹ ச***

***அஸ்வஸேனம் மயம் சைவ சதுரஸ்சார்ங்ககான்ஸ்ததா ।।***

*எரிந்து கொண்டிருந்த அவ்வனத்தில் அஸ்வஸேனன் எனும் பாம்பு, மயன் நான்கு சாரங்க பக்ஷிகுஞ்சுகள் எரிபடவில்லை.*

***அஹோபிரேகவிம்சத்பிர்விரராம ஸுதர்பித: ।।***

*21 நாட்கள் கழித்து அக்னி முழு த்ருப்தி அடைந்தான்*

***அர்ஜுனோ வாஸுதேவச்ச மயோபி [பரதர்ஷப]***

***ரமணீயே நதீகூலே ஸஹிதாஸ்ஸனுபாவிசன்.***

***ரமணீயமான நதீ தீரத்தில் அர்ஜுனன் வாஸுதேவர் இருவரும் மயனுடன் அமர்ந்தனர்.***

***ஆதிபர்வம் முற்றிற்று***

*எத்தனையோ அநாதியான சப்தங்கள் ஒலி ரூபமாக ஆகாசம் முழுவதும் வியாபித்திருக்கின்றன. யோக அப்பியாசங்கள் செய்து மந்திரசக்திகளை, அநாதியான சப்தங்களை, ரிஷிகள் கிரஹித்துக் கொள்கிறார்கள். அதுந்திரியமானவைகளை தெரிந்து கொள்ளும் அறிவுக்கு வேதம் என்று பெயர்.*

*இப்பேர்ப்பட்ட வேதத்தை அநாதி காலம் முதற்கொண்டு புஸ்தகம் இல்லாமலேயே ரிஷிபரம்பரையினர் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். நாம் அபிவாதயே சொல்லும் போது இன்ன ரிஷி, இன்ன பரம்பரை, இன்ன கோத்திரம், இன்ன ஸூத்ரம் என்று சொல்லுகிறோம். அதிலிருந்து நாம் இன்ன ரிஷியின் பரம்பரை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஒரு மருந்தை வாங்கி உபயோகிக்காமல் கொஞ்சநாள் வைத்திருந்தால் அதன் வீரிய சக்தி குறைந்துவிடும். அதன்படி வேதத்தை அப்பியாசம் பண்ணாமல் இருந்தால் அந்த மந்திரங்களின் சக்தி குறைந்துவிடும். அந்த வீரிய சக்தியைத் திரும்பி உண்டுபண்ணுவதற்கு பூஜை, ஹோமம், பல ஆவிருத்திகள் ஜபம் பண்ண வேண்டும். எல்லா பிழைகளுக்கும் பிராயச்சித்தமாக இருப்பது காயத்ரி ஜபம்.*

*--ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்.*

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

### பாகம்-2

## ஸ்ரீ நாராயணதீர்த்தரும் அவர் அருளிச் செய்த ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியும்

*12. ஒவ்வொரு தரங்கத்திலும் இன்ன இன்ன லீலைகள் அபிநயிக்கப்பட்டுள்ளன. இந்த இந்த பாத்திரங்கள் வருகின்றனர் என்று கூறி ஸ்லோகம், கீதம், சூர்ணிகை இவைகளால் அந்த அந்த லீலைகளை விளக்கியுள்ளார். கிருஷ்ண லீலைகளை அபிநயம் செய்தல் என்ற முறையைத் தழுவியே இந்த நூலானது படைக்கப்பட்டுள்ளது. ஹரிகதாகாலக்ஷேபம் செய்யும் பாகவதர்கள் கதையின் ஆரம்பத்தில் ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியின் தொடக்கத்தில் உள்ள 'ஹிமகிரிதயை' பத்யத்தை பாடுகிறார்கள் என்பது இதன் தனிப்பெருமையை விளக்குகிறது.*

*13. ஸ்ரீ நாராயணதீர்த்தர் வேதாந்தங்களில் விசாரம் செய்து நிர்ணயித்தவாறு ஜாதி குணம் கிரியை இவைகளற்றதும் ஆனந்தம் பிரகாசம், சத்து எப்போதும் எங்கும் எல்லாமுமாக இருப்பது ஆகிய லக்ஷணங்களைக் கொண்ட பரம்பொருளை எப்போதும் உள்ளத்திலிருந்து ஆராதித்தவர். ஆயினும் அத்தகைய நிர்குணமான பரம்பொருளை அடைவதற்கு அதன் ராமகிருஷ்ண வடிவங்களை உபாஸிக்க வேண்டும். இந்த சகுண வழிபாடே நாளடைவில் தனக்குத்தானே நிர்குண பரப்ரஹ்ம உபாஸனையாக மற்றும் உதாரணமாக ஜீவன் முக்தரான ஸ்ரீ சுகப்ரஹ்மம் நிர்குண பரப்ரஹ்ம உபாஸனையில் தீவிரமாக ஈடுபட்டவராயினும் ராஜா பரீக்ஷீத்திற்கு பாகவதத்தை, கிருஷ்ணலீலைகளை உபதேஸித்தார். ஒவ்வொரு லீலையிலும் தன் உள்ளத்திலுள்ள பரப்ரஹ்மத்தை நினைவு கூறுகிறார். ஸ்ரீ சுகரைப் போலவே ஸ்ரீ நாராயணதீர்த்தரும் அப்பரப்ப்ரஹ்மத்தை நினைவுகூர்ந்தே பரம்பொருளின் சகுண வடிவங்களைத் துதித்து தன் பாடல்கள் மூலம் வழிபட்டுள்ளார். ஸ்ரீ கிருஷ்ண லீலைகளை வர்ணிக்கும்போதே மற்ற தேவதைகளையும் துதிப்பது இதன் தனிச்சிறப்பு.*

*14. முதலாவது தரங்கத்தில் ஜய ஜய ஸ்வாமின் என்ற கீதத்தில் கணபதியையும், துர்கே துர்கதி ஹாரிணி என்ற ஸ்லோகத்திலும் 'ஜய ஜய துர்கே' என்ற கீதத்திலும் துர்காதேவியையும் 2-வது தரங்கத்தில் 'மங்களானி தனோது மதுஸூதனஸதா' என்ற கீதத்தில் கங்காதரன் தக்ஷிணாமூர்த்தி துர்கா ஸரஸ்வதி கங்கா, சிவன் ஆகிய தேவதைகளையும் துதித்துள்ளனர். 6, 7ம் தரங்கங்களில் நரஸிம்ஹரையும் துதித்துள்ளார். முதலாம் தரங்கத்தில் ஸர்வக்ஞானக்ரியா சக்திம் என்ற ஸ்லோகம் 5-ல்*

மஹாவிஷ்ணுவையும் 3-ம் கீதத்தில் வராஹபுரி வேங்கடேச பெருமாளையும் துதித்துள்ளார்.

15. ஸ்ரீ நாராயணதீர்த்தர் கிருஷ்ணலீலைகளை வர்ணிக்கும் போது ஸ்ரீ ஜயதேவரைப் பின்பற்றாமல், ஸ்ரீ வேதவ்யாஸர், ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ கிருஷ்ணலீலைகளை வர்ணித்த முறையையே பின்பற்றியிருக்கிறார். முதலில் ஸ்ரீ கிருஷ்ணாவதார கட்டத்தில் தமத்புதம் பாலகம் அம்புஜேக்ஷணம் (பாகஸ்க.10 அத்யா 3.ஸ்லோ 9) என்ற ஸ்லோகத்தின் கருத்தை கல்யாணம் விதநோது என்று தொடங்கும் முதல்தரங்கம் ஸ்லோ. 27-ல் சங்கம், சக்ரம், கதை, தாமரைப்பூ, கத்தி, வில் பல இரத்தினங்கள் தொடங்கும் பதித்த கிரீடம் மகரகுண்டலம், மஞ்சள், பட்டு கழுத்தில் கௌஸ்துபமணி இவற்றுடன் கூடியவரும் யாதவகுலத்தின் தலைவனான வஸுதேவருடையவும், தேவகியினுடையவும், குழந்தையாகத் தோன்றியவருமான கிருஷ்ணன் எல்லாவிதமான மங்களங்களையும் அளிக்கட்டும் என்று கூறுகிறார். இதில் கிருஷ்ணனுடைய ஜனனத்தை பற்றி கூற ஆரம்பிக்கும் போதே கல்யாணம் என்று மங்களகரமாக ஆரம்பிக்கிறார். நாராயண பட்டத்திரி நாராயணீயத்தில் கிருஷ்ணனுடைய ஜனனத்தை பற்றி கூற ஆரம்பிக்கும் போது 'ஆனந்தரூப பகவன்', (தஸகம் 38) என்று ஆரம்பிப்பதை நினைவு கூறுவோம். மேலும் நாராயணீயம் ஆரம்பிக்கும் போதும் 'ஸாந்த்ரானந்த' என்றும் ஆனந்தஸ்வரூபியான பரப்ரஹ்மத்தை வர்ணிப்பதும் குறிப்பிடத்தக்கது.

16. ஸ்வாயம்புவ மனுவின் காலத்தில் ஸுதயா என்ற ப்ரஜாபதி ப்ருச்னி என்ற மனைவியுடன் நல்ல பிள்ளையை அடைய பண்ணிரண்டு ஆயிர தேவ ஆண்டுகள் கடும் தவம் புரிந்தார். விஷ்ணு அத்தவத்தின் பலனையளிக்க அவர்கள் முன் தோன்றினார். அப்பொழுது அந்த தம்பதிகள் விஷ்ணுவைப் போன்ற புத்திரனை வரமாக வேண்டினர். அதனால் விஷ்ணுவும் ப்ரச்னிகர்பன் என்ற பெயருடன் பிறந்தார். அந்த தம்பதிகள், அிதி - கஸ்யபராக தோன்றிய போது, அவர்களுக்கு உபேந்திரன் (வாமனன்) என்ற குழந்தையாகப் பிறந்தார். மூன்றாவது முறையாக அந்த தம்பதிகள் தேவகி வஸுதேவராகத் தோன்றிய போது அவர்கள் செய்த புண்ணியத்தினால் விஷ்ணுவே அவர்களுக்கு ஸ்ரீ கிருஷ்ணராக அவதரித்தார். (பாக. ஸ்.க 10 அத்யா 3 ஸ்லே 32-45) மேலே குறிப்பிட்ட விஷயத்தை தத் ப்ராக்தனை கர்மபி என்ற சொற்றொடரால் குறிப்பிட்டுள்ளார். (முதல் தரங்கம், ஸ்லோ 28)

தொடரும்

# அத்வைத ஸித்தாந்த வினா விடை

*4. தொந்தந்தசிமூன்றில் தொல்காமியமாதி*
*தொந்த தசிமூன்றில் தொல்தாமதமாதி*
*வந்த மலங்குண மானச் சிவன் தோன்றின்*
*இந்நூலின் முன் இருள் ஏகுதல் ஒக்குமே*

*(தொந்தத்தசி = தொம் (த்வம்) தத் அசி - நீ அதுவாய் இருக்கிறது)*

*பூர்ணசந்திரன் தோன்றியவுடன் இருள் நாசமடைவது போல ஞானியின் முன் மலமாயை நாசமடைகிறது. ஆதலால், அம்மாயை 'அநித்தியம்' என்பது அத்வைதக் கொள்கை.*

*5. ஆகிய வச்சோயந் தேவதத் தன்னிடத்*
*தாகியவை விட்டாற் காயமுபாதானம்*
*ஏகிய தொந்தத் தசியென்ப மெய்யறி*
*யாகிய சீவன் பரசிவ னாமே*

*சோயந் தேவதத்தன் என்பது 'ஸோயம் தேவதத்த' என்பதன் தற்பவம். இந்த வாக்கியம் தர்க்க சாஸ்திரத்தில் 'அன்று அங்குக் காணப்பட்ட தேவதத்தனே, இன்று இங்கு காணப்படுகிறான் என்ற பொருளில் திருஷ்டாந்தமாகக் கூறப்பட்டிருக்கிறது. அன்று, அங்கு என்னும் அடைமொழிகளையும், இன்று இங்கு என்னும் அடைமொழிகளையும் விட்டு விட்டால் நின்றது ஒன்றாம் தேவதத்தனே என்று விளக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறே 'த்வம், தத், அஸி' என்றும் வேதாந்தமஹாவகாக்யித்திலும், த்வம் (நீ) என்னும் பதத்தின் பொருளில் அடையாகவுள்ள கட்டுண்டிருக்கும் ஜீவத் தன்மையையும் 'தத்' (ஈசன்) என்னும் பதத்தின் பொருளில் அடையாகவுள்ள தன்னினும் வேறாக உலகத்தைப் படைக்கும் ஈசத் தன்தையையும், உண்மையறிந்து கொண்டு விட்டுவிட, மெய்யறிவாகிய சீவன் பரமசிவன் ஆகும் எனக் கூறப்பட்டிருக்கிறது, என்பது அத்வைதக் கொள்கை. இதனையே திருமூலர் இந்தப் பாட்டில் விளக்கியிருக்கிறார்.*

***வினா :** - ஔவையார் சொற்படி 'திருவாசகம்' வேதாந்த நூல் என்பதற்கு என்ன ஆதாரம்?*

**விடை :** - திருப்பெருந்துறையில் சிவபெருமானிடமிருந்து உபதேசம் பெற்ற மாணிக்கவாசகர்

இன்றெனக் கருளி யிருள்கடிந்துள்ளது எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின்றன்மை நினைப்பற நினைந்தே நீயலாற் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந் திருப்பெருந்துறையுறை சிவனே
யொன்றுநீ யல்லையன்றி யொன்றில்லை யாருண்ணை யறியகிற் பாரே

என்று கூறுகிறார். இங்கு 'நீயலாற் பிறிது மற்றின்மை ஒன்று நீயல்லை யன்றியொன்றில்லை என்பன சிறந்த அத்வைதக் கொள்கையை விளக்குகின்றன.'

**வினா :** - அத்தொடர்கள் அத்வைதக் கொள்கையையே கூறுகின்றன என்பதற்கு மற்றும் ஆதாரம் கூற முடியுமா?

**விடை :** - கொற்றவன்குடி, ஊரினராகிய உமாபதி சிவாச்சாரியார் 'சங்கற்ப நிராகரணம்' என்ற நூலின் இறுதியில் சைவவாதி மதத்தைக் கண்டிக்கிறார். அதன் கடைசியில், அவர் சைவவாதிகளின் மதமும் அத்வைதமே ஆகிவிடுகிறதே என்று கூறுகிறார். அதற்கு எடுத்துக்காட்டாக முற்கூறிய 'இன்றென் கருளி' என்னும் திருவாசகத்தைக் கூறி, மாணிக்கவாசகரும் அத்வைதியாகி விடுகிறார் என்ற நூலை முடித்திருக்கிறார்.

**வினா :** - சைவ சித்தாந்த சாத்திரத்தில் யாது அத்வைதத்தைக் கூறுகிறது ?

**விடை :** - சைவ சாத்திரத்திற்கு முதநூலாகிய சிவஞான போதமே அத்வைதத்தைக் கூறுகிற நூல் தான்.

**வினா :** - அது எப்படி?

**விடை :** - ஓர் அரசகுமாரன் பிறவியிலிருந்து வேடர் கூட்டத்தில் வளர்ந்தான். அதனால் தன்னை வேடனாகவே நினைத்தான். அவன் உண்மையில் அரசகுமாரனாயிருந்தும் தன்னை வேடனாக நினைத்து அஞ்ஞான மயக்கத்தாலே தான் பின்பு அரசன் அவனைத் தேடிக் கண்டு அவனுக்கு அறிவுறுத்த அஞ்ஞானத்தாலே தோன்றிய வேடத்தன்மை நீங்கித் தனது உண்மையான அரசகுமாரத் தன்மையை அடைந்தான்? என்ற கதையைப உதாரணமாகக் காட்டி 'சீவனும் பரம் பொருளும் ஒன்றல்ல என்ற வேற்றுமைத் தோற்றம் மயக்கமே சீவன் முக்காலத்திலும் சிவனே என்பது' என்றும் சிவஞானபேதம் 8-ம் சூத்திரத்தால் விளக்கப்படுகிறது.

(தொடரும்)

தமிழ்நாடு பிராமண சங்கம்-ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ் இணைந்து கைலாஷ் யாத்திரையை

# சலுகை கட்டணத்திலும், மாதாந்திர தவணையாகவும்

செலுத்தக் கூடிய வகையில் சேவை மனப்பான்மையுடன் நடத்தும்

# கைலாஷ்-மானஸரோவர்

மற்றும் வைணவ சம்பிரதாயத்துடன் கூடிய **முக்திநாத் திவ்யதேச யாத்ரா-2020**

**20 ஆண்டுகளில் 7300 சிவனடியார்கள் தரிசனம் பெற அழைத்து சென்று சாதனை கொண்ட ஒரே நிறுவனம்**

சிவமே தமிழ் - தமிழே சிவம். மனிதனாகப் பிறந்த நம் அனைவருக்கும் இறைவனைக் காண வேண்டும் என்ற எண்ணம் மனதின் அடியிலே இருந்துகொண்டே இருக்கிறது. அந்த இறைவனாகிய எம்பெருமான் சிவனையும் பார்வதி தேவியையும் வாழ்க்கையில் ஒருமுறையேனும் கயிலையில் நேரில் தரிசித்து எல்லையில்லாப் பேரின்ப நிலை அடையவும், மேலும் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று மானஸரோவர் தடாகத்தில் சிவபூஜைக்குபின் திருமுறைகளோடு, கயிலாய வாத்தியங்கள் இசைக்க, சங்க நாதம் ஒலிக்க, தமிழ் வேதங்களுடன், சிவ வாத்திய முழக்கத்தோடு அடியார்கள் ஆனந்த நடனமாடிட, சகல பரிவாரங்களும் அசைந்து வர, வரலாறு பதிவு செய்யும் விதமாக அடியார்கள் ஒருங்கிணைந்து நடத்தும் மாபெரும் இந்துக்களின் இறைநெறியான திருவாசகம் முற்றோதலுடன் கூடிய இந்த யாத்திரையின் மூலம் எழுச்சி மிக்க அபரிதமான ஆயுளை நீடிக்கச் செய்யும் சகல சக்திகளும் நிறைந்த பிரபஞ்ச உயிர் சக்தியை நீங்கள் நேரில் பெறவும், மகிமைகொண்ட பிரபஞ்ச தெய்வீக நடனமான (Cosmic Dance) சிவதாண்டவத்தை நேரில் தரிசிக்கவும், மேலும் நமது உடலின் அத்தனை ஆதார சக்கரங்களும் விழித்துக் கொள்ள ஆன்ம சக்தி இறைசக்தியோடு எழுச்சியுடன் இணைவதை நீங்கள் உணரவும் ஓர் அரிய வாய்ப்பு!

ஆன்மீக அதிசய அற்புதங்கள் நிகழ்ந்த, தெய்வங்கள் வாழ்கின்ற திருக்கயிலையில்
**நடையிடுங்கள்!**

மானஸரோவர் புனித நீரில் மூழ்கியெழும் பேறுபெற்று தெய்வீக மர்மங்கள் நிறைந்த அவ்விடத்தில்
**தியானியுங்கள்!!**

கயிலாயத்தின் சூட்சம அதிர்வுகளையும், கயிலாயத்தின் ரகசியங்களையும்
**உணர்ந்திடுங்கள்!!!**

**தாங்கள் கடவுளைக் காணப் போகிறீர்கள்!**
**கடவுளோடு கலந்துறவாடப் போகிறீர்கள்!!**

| மே 07 | ஜூன் 05 | ஜூலை 04 | ஆக.03 | செப்.01 |
|---|---|---|---|---|
| சித்ரா பௌர்ணமி | வைகாசி பௌர்ணமி | ஆனி பௌர்ணமி | ஆடி பௌர்ணமி | சிவ-பார்வதி திருக்கல்யாண சிறப்பு பெருவிழா யாத்திரை |

| | | |
|---|---|---|
| சென்னையிலிருந்து ரயில் மூலம் டெல்லி வழியாக காட்மண்டு அடைந்து, பின்பு அங்கிருந்து தரை வழியாக சூப்பர் டீலக்ஸ் ஏசி வாகனம் மூலம் கைலாஷ் யாத்திரை சென்று வர 20 நாட்கள் | காட்மண்டுவிலிருந்து தரை வழியாக சூப்பர் டீலக்ஸ் ஏசி வாகனம் மூலம் கைலாஷ் யாத்திரை சென்று வர 14 நாட்கள் | சென்னையிலிருந்து விமானத்தில் லக்னோ வழியாக ஹெலிகாப்டர் மூலம் கைலாஷ் யாத்திரை சென்று வர 11 நாட்கள் |

அனைத்தையும் குணமளிக்கும் சக்தி நிறைந்த மானஸரோவர் தடாகத்தில் புனித நீராடி தெய்வீக அதிசயங்களை காணவும், கிரிவலம் சென்று கயிலைநாதனை முழுமையாக தரிசிக்கவும், நமக்குள்ளே இருக்கும் பிரபஞ்சம் தூண்டப்படவும், ஆற்றல் மிக்க பாசிடிவ் காஸ்மிக் எனர்ஜி நம்முள் பிரவேசித்து பிரதிபலிப்பதை நிதர்சனமாக உணர்ந்து தெய்வீக பேரின்ப நிலையை அடையவும், யோகா மற்றும் பிராணாயாமம் போன்ற சிறப்பு பயிற்சிகளை முறையாக அளித்து யாத்திரை முழுவதும் நாங்களே உடன் இருந்து தகுந்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்வது இந்தியாவிலேயே யாத்திரையில் 20 வருடம் அனுபவம் கொண்ட நாங்கள் மட்டுமே

ஸ்ரீராமானுஜரின் 1003வது அவதார ஜெயந்தி விழாவை முன்னிட்டு ஸ்ரீராதா கல்யாணம், உபன்யாசம், பாராயணத்துடன் கூடிய

# நேபாள்-ஸ்ரீசாளகிராம முக்திநாத் திவ்யதேச யாத்ரா

ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை மாதம் ஒரு குழு புறப்படும் | ரயில் மூலம் 12 நாட்கள் விமானம் மூலம் 6 நாட்கள்

சீனா, திபெத், நேபாள் டூரிஸம் போர்டில் பெர்மிட் மற்றும் விசாவை நேரடியாக பெறுவதால் குறைந்த கட்டணத்தில் ரயில் மூலம் சென்னையிலிருந்து காட்மண்டு வரை தொடர்ந்து அழைத்துச் செல்வது நாங்கள் மட்டுமே!

ஞான ஒளி வீசும் சிவனின் வாசஸ்தலத்தை தரிசிப்பதன் மூலம் காணக்கிடைக்காத பல அற்புதங்களை தாங்கள் காணப் போகிறீர்கள். தங்களின் உள்ளத்தையும், உணர்வுகளையும் உயர்த்தி மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு உயரப் போகிறீர்கள். நூறு பிறவியின் பெரும்பயனை அடையப் போகிறீர்கள்

கயிலை தரிசனம் நம் வாழ்வை நீடிக்கும் ஆற்றல் கொண்ட அதிர்வலைகளைக் கொண்டது

GET ₹ 40,000 FOR KAILASH
GET ₹ 10,000 FOR MUKTHINATH
SUBSIDY FROM TAMILNADU GOVT.


#1 yatra

தெய்வீக புதிராக நிற்கும் கயிலை மலையானை தொட்டு ஸ்பரிசித்து மெய்சிலிர்க்க வைக்கும் பேரின்நிலை, யோகநிலை அடைய தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கும்

## ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்®

sapyservice@gmail.com | www.annapooraniyatra.com

63, NADU STREET, MYLAPORE, CHENNAI-4 ✆ 8056 333 333, 8056 444 444



யாத்திரை பதிவு கட்டணம் ரூ. 5,000 மட்டுமே. மேலும் கைலாஷ்-மானஸரோவர், முக்திநாத் யாத்திரை கட்டணம் மற்ற நிறுவனங்களை விட ரூ. 10,000 குறைவே.

SPECIAL CARE FOR SENIOR CITIZENS
PASSPORT WILL BE ARRANGED

சீன, திபெத், நேபாள அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

தெய்வ உலகம் திருக்கயிலையில் இறைவனை நீங்கள் பார்க்கலாம்! இறைவன் பேசுவதை நீங்கள் கேட்கலாம்! இறைவனோடு நீங்கள் பேசலாம்! இறைவன் நடத்தும் அற்புதங்களை நீங்கள் உணரலாம்!

யாத்திரையில் கலந்துகொள்ளும் அனைத்து அடியார்களையும் கிரிவலம் அழைத்துச் செல்வதே எங்களின் முக்கிய நோக்கமாகும்

# பகவத்பாதரின் மகிமை

*பக்ஷிதீர்த்தம் ராமசந்த்ர தீக்ஷிதர்*

அத்வைதத்தை ப்ரதிஷ்டை செய்து ஜகத்திற்கு மஹோபகாரம் செய்த ஸ்ரீ பகவத் பாதர்களை அவசியம் நாம் ஸ்மரிக்க வேண்டும். இது தான் ஸம்ப்ரதாயம். நம் பரமாசார்யர்கள் மயிலாப்பூரில் உபதேசித்த அருள் மொழிகளிலிருந்து ஸ்ரீ பகவத் பாதர்களுடைய சரித்திர மஹிமையைக் கொஞ்சம் சொல்லுகிறேன். இந்த விஷயம் ஸ்ரீ சங்கர விஜயத்தில் இல்லை.

'சதுர்பி: ஸஹ ஸிஷ்யைஸ்து ஸங்கரோண்வதரிஷ்யதி' என்ற புராணவாக்யம் ஆசார்யர்களடைய அவதாரத்தைப் பற்றிச் சொல்கிறது. புராணங்கள் எல்லாம் வேதத்தின் வியாக்யான ரூபம். ஆகவே இந்த வசனத்திற்கும் வேதத்தில் ஆதாரம் இருக்க வேண்டும். ஆசார்யர்களுடைய அவதாரத்தைக் குறிக்கும் இந்த மூல வசனம் ஸ்ரீ ருத்ரத்திலுள்ள 'நம: கபர்திநே ச வ்யுப்தகேஸாய ச' என்பது தான். ஈச்வரனுடைய ஜடைக்குத் தான் கபர்தம் என்று பெயர். வ்யுப்தகேஸ: என்ற பதத்திற்குக் கேசத்தைக் களைந்தவர்- எடுத்தவர் என்று அர்த்தம். முன்பதம் ஜடை தாங்கிய சிவனையும் பின்பதம் ஸந்யாஸிகளான ஆசார்யர்களையும் குறிக்கிறது. இதில் ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. ருத்ரம் ஈச்வரனுடைய ஸார்வாத்மயத்தை-எங்கும் இருப்பதைச் சொல்கிறது. எவ்வளவோ ஸந்யாஸிகள் இருக்கிறார்கள். இந்தப் பதம் ஆசார்யர்களை மட்டும் எப்படிக் குறிக்கும்? இது விஷயமாக நன்றாகக் கவனித்தால் தெரியும். ருத்ரத்தில் சில அனுவாகங்கள் ஒன்றுக்கொன்று விருத்தமானவைகளையும் சில அவ்விதமில்லாதவைகளையும் சொல்லுகின்றன. நமோ பவாய ச என்ற இந்த அனுவாகத்தில் நம: ஸஹஸ்ராக்ஷாயச ஸததன்வனே ச என்றிருப்பதால் ஒன்றுக்கொன்று விரோதமில்லை. அனேக வில்கள் இருப்பதால்தான் அநேக கண்களும் இருக்கின்றன. இது போல் கபர்தினேச என்ற இடத்திலும் பகவத் பாதர்களைச் சொன்னால்தான் விரோதமில்லாமல் இருக்கும். இல்லாவிடில் ஜடையுள்ளவர் முன்டி - மொட்டையடித்துக் கொண்டவர் என்பது ஒன்றுக்கொன்று விரோதமுள்ளது. இம்மந்திரத்தின் விவரணம் பவிஷ்யப் புராணத்தில் காணப்படுகிறது.

கபர்தமென்னும் பரமசிவனுடைய ஜடையிலிருந்து ஆவிர்பவித்த வீரபத்ரர் தக்ஷயாகத்தை அழித்த பிறகு வால்மீகி வசித்த உத்பல வனத்தில் வஸித்துவிட்டு, பிறகு தக்ஷிண தேசத்தில் பைரவதத்தருக்குப் பிள்ளையாக அவதரித்தார். இவரே சிவகுரு. இவரே கபர்தி. பிறகு இவருக்கு புத்திரராக ஈசுவரன் அவதரித்தார். இவர்தான் ஆசார்யர், வ்யுப்தகேஸ:. இதுபோல் ருக்வேதத்திலும் 'ஏதாம் சேத்து முபஹ்வயாமி' என்ற மந்திரம் ஸ்ரீ ஆசார்யர்களுடைய அவதாரத்தைக் குறிப்பதாக விஷ்ணுதர்மோத்தர

புராணத்தில் வேத த்ரய வியாக்யானம் என்ற ப்ரகரணத்தில் சொல்லப்பட்டிருப்பதாக ஸ்ரீ பாஸ்கரராயர் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம வியாக்யானத்தின் ஆரம்பத்தில் மங்கள ச்லோகத்தில் சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த விஷயம் இப்பொழுது கிடைக்கக்கூடிய அச்சுப் புஸ்தகத்தில் காணப்படவில்லை. ஆதலால் பழைய ஓலைச் சுவடிகளை பரிசோதித்து இந்த விஷயத்தை கண்டுபிடிக்க வேண்டும். ஆசார்யர்களுடைய வம்சத்தில் எல்லோருமே ஈச்வராம்சமுள்வர்கள். இவ்விதம் சங்கராம்சமாய் அவதரித்த பகவத் பாதர்கள் முதலையின் வியாஜத்தால் மாதாவின் அனுமதியோடு ஸந்யாஸத்தை ஸ்வீகரித்துக் கொண்டு கோவிந்த யோகீந்த்ரர்களின் ஸமீபத்தையடைந்ததும், அவர்கள் ஸமாதி கலைந்து ‘நீ யார்’ என்று கேட்டபொழுது ‘ந பூமிர் ந தோயம்’ என்று பத்து ச்லோகங்களால் பதில் சொல்லுகிறார்கள். இதிலிருந்து பகவத் பாதர்களுடைய மஹிமை பூர்ணமாக வெளியாகிறது. உலகத்தில் எல்லோரும் ‘நீ யார்’ என்று கேட்டால் நான் இன்னார் என்றுதான் பதில் அளிப்பார்கள். ஆசார்யர்களோ அப்படிச் சொல்லாமல் நான் பூமியில்லை ஜலமில்லை என்று சொல்கிறார்கள். உபநிஷத்துகள் ப்ரஹ்மத்தை ‘நேதி-நேதி’ என்று நிஷேத முகமாயும் ஸத்யம் ஞானம் அனந்தம் என்ற விதிமுகமாயும் இரு ப்ரகாரமாயும் போதிக்கின்றன. அதுபோல் நான் பூமியில்லை என்று நிஷேத ரூபமாயும் கேவல சிவஸ்வரூபம் என்று விதிரூபமாயும் தம்மை ப்ரஹ்ம ஸ்வரூபமாகச் சொல்லுகிறார்கள். பூமி, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம் இவைகள் நானில்லை என்பதால் ஆத்மா, பாஞ்சபௌதிகமான சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டதாக ஆகிறது. ஐந்து பூதங்களுடைய கூட்டத்தையே சரீரமென்று சொல்பவர்களை நிராகரிப்பதற்காக ‘‘ந தேஷாம் ஸமூஹ:’’ என்று சொல்கிறார். இவ்விதமே இந்திரிய ப்ராணாதிகளும் நானில்லை. இவைகளெல்லாம் பொய். ஆத்மா ஸத்யம். இவை தேச கால வஸ்துக்களால் பரிச்சின்னமான படியாலும் அழிந்து போவதாலும் ஸுஷுப்தியில் இவைகளெல்லாம் நீங்கி ஆத்மா மட்டும் ஆனந்தரூபியாக ப்ரகாசிப்பதாலும் இவைகளைக் காட்டிலும் வேறானது ஆத்மா. எப்பொழுது நம்முடைய ஸமஷ்ட்யாத்மாவான ஹிரண்யகர்பர் நான் என்று சொல்ல ஆரம்பித்தாரோ, அது முதற்கொண்டு எல்லோருக்கும் அஹம்பாவம் வேரூன்றியிருக்கிறது. இது நீங்க வேண்டும். அவஸ்தாத்ரயங்களையும் சோதிக்க வேண்டும். பகவத்பாதர்கள் இந்தத் ‘தச ச்லோகி’யில் ஆத்மஸ்வரூபத்தை நன்கு சோதித்துக் காட்டியிருக்கிறார்கள். இதை நன்றாக அறியவேண்டும். பிறகு ஸ்ரீ ஆசார்யர்கள் எழுதிய பாஷ்யாதி கிரந்தங்களை த்ரிமூர்த்திகளும் பார்த்து சிலாகித்தார்கள். இவ்விதம் இன்றைய தினம் பகவத்பாதர்களின் மஹிமையை ஸ்மரித்ததானது ஈச்வர ஸ்மரண ரூபமாயும் ஸ்ரீ பெரியவாளுடைய ஸ்மரணமாகவும் ஆகிறது. அவர்களுடைய கிருபையால் சகல சிரேயஸும் உண்டாகும்.

# மனத்துக்கு மருந்து

*ஸ்ரீ ஆசார்யாள்*

1. உலகில் அநேக விதமான கற்கள் உள்ளன. சில கற்கள் நாய்கள் அடிக்க பயன்படுகின்றன. சில கற்கள் கடவுள்களை ஆவாஹனம் செய்யப் பயன்படுகின்றன. எல்லாம் கற்களே. அதேபோல் உலகில் அநேக விதமான மனிதர்கள் இருக்கின்றனர். சில மனிதர்கள் துக்கத்தைக் கொடுக்கக் கூடிய பொருள்களையே சிந்தித்துப் பலருக்கும் துக்கத்தைக் கொடுத்துக் கொண்டே தங்கள் வாழ்வை முடித்துக் கொள்கிறார்கள். சிலர் மனிதன் என்ற பெயருக்கு உகந்தவாறு கடவுளை மனனம் செய்துகொண்டு பலருக்கும் ஆனந்தத்தை கொடுப்பவர்களாய்த் தங்கள் வாழ்வை முடித்துக் கொள்கிறார்கள்.

2. வியாதியால் கஷ்டப்படுகிறவன் வைத்தியன் சொற்படியே மருந்தோ, பத்தியமோ இருக்கவேண்டுமே தவிர, தனக்குத் தோன்றியபடி இருக்கக்கூடாது. அப்படி வைத்தியன் சொல்லைக் கேளாமல் தன் இஷ்டப்படி நடந்து கொண்டால் வியாதியும் அதிகரிக்கும்: கஷ்டமும் உண்டாகும். அதே போல் சம்சாரமாகிய வியாதியால் கஷ்டப்படுகிற நாம் நம்முடைய குரு எவ்விதம் நடந்துகொள் என்று சொல்கிறாரோ அவ்விதம் இருக்க வேண்டும். அவ்விதம் சொற்படி நடக்காமல் நம் இஷ்டப்படி நடந்தால் சம்சாரமாகிய வியாதியும், கஷ்டமும் அதிகரிக்கும். ஆகையால் குரு உபதேசத்தைக் கேட்டு அதை நடைமுறைக்குக் கொண்டுவந்து பேரானந்தத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும்.

3. அடுப்பு நன்றாக எரிய வேண்டும் என்பதற்காக ஒரேயடியாக எண்ணெயை நெருப்பில் ஊற்றினால் எரியாது. மேலும் அணைந்து புகைய ஆரம்பித்துவிடும். கொஞ்சம் கொஞ்சமாக எண்ணெய் விட்டால் அடுப்பு நன்றாக எரியும். அதேபோல் சாமானியமான ஒருவனைப் பெரிய அறிவாளியாக்க நினைத்து இரவு பகலாகப் படிப்புச் சொல்லி கொடுத்தால் அறிவாளியாகமாட்டான், சோர்வே அடைவான். கொஞ்சங் கொஞ்சமாக அவன் மனத்தில் விஷயங்களைப் புகுத்தினால் அவன் பெரிய அறிவாளியாகிவிடுவான்.

4. ஓர் உண்டியல் இருக்கிறது, அதில் காசுகளை ஒவ்வொன்றாகத்தான் போட்டு நிரப்பலாம். ஒரேயடியாகப் போட்டு நிரப்ப முடியாது. அதே போல் பெரிய அறிவாளியானாலும் விஷயங்களை வேகமாக உளறிக் கொட்டினால் அவனால்

ஒன்றும் புரிந்துகொள்ள முடியாது. மெதுவாகவும் நிதானத்துடனும் விஷயங்களைச் சொன்னால் எவ்வளவு சொன்னாலும் அவனால் புரிந்துகொள்ள முடியும்.

5. பெருங்காயத்தை ஒரு பாத்திரத்தில் வைத்துப் பிறகு கொஞ்சநாள் கழித்து அதை எடுத்து விட்டாலும் அந்தப் பாத்திரத்திலிருந்து பெருங்காய வாசனை மறையாது. அதேபோல் நாம் பல பொருள்களை அநுபவித்திருந்தாலும் பல நாட்கள் கழித்தும் அந்த அநுபவத்தின் எண்ணம் மறைவதில்லை.

6. அழுக்குள்ள பாத்திரத்தைச் சுத்தம் செய்ய மண்ணைத்தான் உபயோகிக்கிறோம். அதேபோல் துஷ்டனைச் சீர்திருத்த அவனுடன் பழகித்தான் அவனை நல்லவனாக்க முடியும்.

7. முள்ளை எடுக்க முள்வாங்கி தேவைப்படுகிறது. அதேபோல் துஷ்டனைத் திருத்த, துஷ்டகுணத்தைக் கொஞ்சம் எடுத்துக்கொண்டுதான் திருத்த முடியும்.

8. நாயின் வால் வளைந்திருப்பது இயற்கை. அதை நிமிர்த்த முடியாது. அதேபோல் ஒரு மனிதனின் இயற்கைக் குணங்களை ஒருவனால் மாற்ற முடியாது.

9. கற்கண்டை வாயில் போட்டுக்கொண்டு கடித்துவிடாமல் சப்பிக் கொண்டே இருந்தால் நமக்குத் தெரியாமலே கரைந்துவிடும். அதேபோல் நாம் வாழ்க்கையில் ஏதோ காரியங்களைச் செய்துகொண்டே இருக்கிறோம். நம்மையும் அறியாமல் திடீரென்று நாம் கிழட்டுத்தன்மையை அடைந்து பிராணனும் போய் விடுகிறது.

10. கற்கண்டை வாயில் போட்டுக்கொண்டு இருக்கையில் இனிப்பாக இருக்கிறது. ஆனால் நம் வாழ்க்கையில் துன்பந்தான் மிதமிஞ்சி நிற்கிறது.

11. கோரைப் பாயின்மேல் வஸ்திரம் போட்டுக்கொள்ளாமல் படுத்துக் கொண்டால் நம் உடலின்மீது கோரைப்பாயின் வரிகள் படிந்துவிடும். அதேபோல் நாம் பல பொருள்களை அநுபவிக்கிறோம். அந்த அநுபவத்தினால் அதன் நினைப்பு ஏற்படுகிறது.

12. சித்திரம் வரைபவன் தான் வரையப் போகும் சித்திரத்தின் உருவத்தை மனத்தில் நன்றாகப் பதிய வைத்துக் கொண்டால்தான் அவனால் அதை வரைய முடியும். அதேபோல் ஒரு பொருளின் தன்மையைப் பூர்ணமாக அறிய வேண்டுமானால்

அந்தப் பொருளின் எல்லா அம்சங்களையும் உணர்ந்திருந்தால்தான் அறிய முடியும்.

13. ஒரு மண்பாத்திரம் செய்ய வேண்டுமானால் வெறும் மண்ணினாலும் பண்ண முடியாது: வெறும் குயவனாலும் பண்ண முடியாது. குயவனால் மண்ணையும் இன்னும் பல பொருள்கயைம் வைத்துக்கொண்டுதான் பாத்திரம் செய்ய முடியும். அதேபோல் சைதன்ய ஸ்வரூபியான கடவுளால் அவித்யை என்படும் ஜடப்பொருளால் ஒவ்வொரு ஜீவனின் கர்மாக்களை அநுசரித்து உலகம் உண்டுபண்ணப்பட்டது.

14. கருங்கல்லும் எறும்பு ஊரத் தேயும். அதேபோல் கடின சித்தமுள்ளவர் மனமும் நல்ல வார்த்தைகளைக் கேட்பதானல் சிறிது இளகும்.

15. வெல்லம் சுபாவமாகக் கட்டியாக இருக்கும். நெருப்பில் ஒரு பாத்திரத்தில் தண்ணீருடன் வெல்லத்தை வைத்தால் நெருப்பின் சம்பந்தத்தால் வெல்லம் தண்ணீராய் உருகிவிடும். அதேபோல் நம் மனம் சுபாவமாகக் கடினமாக இருந்தாலும் கஷ்டப்படுகிறவனைக் கண்டால் நம் மனம் இளகத்தான் இளகும்.

நமது மனம் நமக்கு வசமாக வேண்டும். மனம் அடங்கிவிட்டால் பின்ன வேறொன்றும் தேவையில்லை. ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது மனத்தை அமைதியாக வைத்துக்கொண்டு புலன்களைக் கண்ட வழியில் சிதறவிடாமல், தியானத்தில் அமர வேண்டும். அப்படித் தியானம் செய்வதால் புத்தியானது தெளிவடையும். ஆசையும் கோபத்தையும் அடக்குவதற்கு இது ஒப்பற்ற சாதனம். சித்தம் சுத்தியானால் ஆத்ம ஞானம் உண்டாகும். இவ்விதம் லோகத்தில் ஒவ்வொருவனும் தனது அறிவு வளர்ச்சிக்கும் ஆத்ம முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டும்.

**--ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்.**

**ஸனாதன தர்மப்புதிர்கள் பிப்ரவரி விடைகள்**

1. ஷட்ப்தீ ஸ்தோத்ரம்
2. 3, 5 ,7
3. ஒன்று
4. அதல விதலஸுதல தலாதல மகாதல ரஸாதல பாதாள
5. பஞ்சவடீ
6. திருவெற்றியூர்
7. ஆக்யாஷஷ்டி
8. ஈங்கோய் மலை
9. லோபாமுத்ரா
10. காஷ்மீரம்

# மனச்சாந்தி

அஸுரபாவமுள்ள மனிதர்களால் வியாபித்திருக்கும் உலகம் அஸுர லோகம். ஆசை, கோபம், லோபம் இம்மூன்றுகளுக்கும் வசப்பட்டு அதன் வழியே போகிறவர்கள் அஸுரர்கள். பகவான் கீதையில் அஸுரபாவத்தை விஸ்தாரமாகக் கூறி, கடைசியில் சொல்கிறார்.

**த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாஸநமாத்மந: ।**
**காம: க்ரோதஸ் ததா லோபஸ் தஸ்மாதேதத் த்ரயம் த்யஜேத் ॥**

நம் இஷ்டப்படி காரியம் நடக்காவிட்டால் கோபம் உண்டாகிறது. காமத்தின் ஒருவிதமான நிலை கோபம். லோபமும் ஆசையின் வேறுபாடுதான். ஆகையால் ஆசையே அஸுரபாவத்தின் முக்கியப் பொருள்.

நாம் சுகத்தை அனுபவிக்கவேண்டி அதற்குச் சாதனமான ஸங்கீதம், ஸ்திரி, பணம் இவைகளில் அதிக ஆசை வைக்கிறோம். கண், காது, மூக்கு, நாக்கு, ஸ்பர்சம் முதலிய இந்திரியங்களால் அனுபவிக்கப்படுபவைகளே விஷயங்கள். அந்த விஷயங்கள் நமக்குத் தாற்காலிகமான சுகத்தை உண்டுபண்ணி, மறுபடியும் அதை அனுபவிக்க வேண்டுமென்ற ஆர்வத்தையும் தூண்டுகின்றன. பணம், ஸ்திரி, சப்தம் முதலியவைகள் கொஞ்சகாலம் கழிந்தபின் நம்மைவிட்டு விலகிவிடுகின்றன. அவைகளுக்கு நம்மிடம் கொஞ்சம்கூடத் தாக்ஷிண்யமில்லை. அத்துடன் நமக்குப் பெரும் துன்பத்தையும் உண்டுபண்ணிவிட்டுச் செல்லுகின்றன. ஒரு வஸ்துவில் எவ்வளவுக் கெவ்வளவு பரிசயமும் ஆசையும் அதிகமாக வைக்கிறோமோ, அந்த வஸ்துவின் பிரிவு ஏற்பட்டால், அவ்வளவுக் கவ்வளவு துக்கத்தை அது அதிகமாகக் கொடுத்துவிட்டுப்போகிறது.

ஆகவே நம்மிடம் தாக்ஷிண்யமில்லாத விஷயங்களை நாமே விட்டு விடுவது நல்லது. விஷயங்கள் நம்மை விடுவதோ நிச்சயம். அதை நாம் விட்டுவிட்டால் அவைகளால் நமக்குச் சுகாநுபவத்தில் ஆர்வம் ஏற்படுவதில்லை. அது போனதால் வருத்தமும் ஏற்படுவதில்லை. த்ருஷ்ணா க்ஷயம், (ஆசை இல்லாமை) என்னும் மஹாஸௌக்யம் ஏற்படுகிறது. ஸந்தோஷம், திருப்தியிருந்தால் அதைவிட ஸௌக்யம் கிடையாது. ஆசையிருக்கும் வரையில் திருப்தி கிடையாது. ஆசையை விட்டால் விஷயங்கள் நமக்குப் பெரிய சௌக்யத்தைக் கொடுக்கின்றன.

நம்மைவிட்டு அவசியம் ராஜ்யம் போய்விடும் என்ற தீர்மானமுள்ள அரசரர்கள், ராஜ்யம் அவர்களைவிட்டுப் போய் மனத்தைத் துன்புறுத்துவதற்கு விடாமல், அவர்களே ராஜ்யத்தைவிட்டு மனச் சாந்தி அடைந்ததுடன், விட்டுக்கொடுத்ததின் மூலம் பெரிய தியாகி வாய்ந்தவர்களாயும் விளங்குகிறார்கள். இந்தத் தத்துவத்தை பரம வைராக்ய ஸம்பன்னரான ஸ்ரீ பர்த்ருஹரி வெளியிடுகிறார்:

**அவஸ்யம் யாதாரஸ் சிரதரமுஷித்வாபி விஷயா:**
**வியோகே கோ பேதஸ் த்யஜதி ந ஜநோ யத் ஸ்வய முமூந் ।**
**வ்ரஜந்த: ஸ்வாதந்த்ர்யா ததுல பரிதாபாய மநஸ:**
**ஸ்வயம் த்யக்தா ஹ்யேதே ஸமஸுக மநந்தம் விதததி ॥**

ஒருவிதமான ஆசையும் வைக்காமல் இருந்தால், அது திருப்தியைக் கொடுத்து மிகப் பெரிய சுகத்தைக் கொடுக்கும். விஷயங்களில் ஆசையைக் குறைத்துக் கொண்டால், அந்த அளவு திருப்தியை உண்டாக்கிச் சுகத்தை உண்டுபண்ணுகிறது. உலக வ்யவஹாரத்தில் ஈடுபடுகிறவர்கள் கூடிய மட்டும் விஷயங்களில் அபரிமிதமான ஆசையை வைக்காமல் நடந்துகொண்டால் அதற்குத் தகுந்தபடி திருப்தியும் சுகமும் ஏற்படும். அஸுரபாவம் நீங்கும்; சுகமாய் வாழலாம்.

எத்தனையோ அநாதியான சப்தங்கள் ஒலி ரூபமாக ஆகாசம் முழுவதும் வியாபித்திருக்கின்றன. யோக அப்பியாசங்கள் செய்து மந்திரசக்திகளை, அநாதியான சப்தங்களை, ரிஷிகள் கிரஹித்துக் கொள்கிறார்கள். அதுந்திரியமான வைகளை தெரிந்து கொள்ளும் அறிவுக்கு வேதம் என்று பெயர்.

இப்பேர்ப்பட்ட வேதத்தை அநாதி காலம் முதற்கொண்டு புஸ்தகம் இல்லாமலேயே ரிஷிபரம்பரையினர் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். நாம் அபிவாதயே சொல்லும் போது இன்ன ரிஷி, இன்ன பரம்பரை, இன்ன கோத்திரம், இன்ன ஸூத்ரம் என்று சொல்லுகிறோம். அதிலிருந்து நாம் இன்ன ரிஷியின் பரம்பரை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஒரு மருந்தை வாங்கி உபயோகிக்காமல் கொஞ்சநாள் வைத்திருந்தால் அதன் வீரிய சக்தி குறைந்துவிடும். அதன்படி வேதத்தை அப்பியாசம் பண்ணாமல் இருந்தால் அந்த மந்திரங்களின் சக்தி குறைந்துவிடும். அந்த வீரிய சக்தியைத் திரும்பி உண்டுபண்ணுவதற்கு பூஜை, ஹோமம், பல ஆவிருத்திகள் ஜபம் பண்ண வேண்டும். எல்லா பிழைகளுக்கும் பிராயச்சித்தமாக இருப்பது காயத்ரி ஜபம்.

**--ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்.**